உ
குருபாதம்

# ஞானசம்பந்தம்

மலர் 37 | பிங்கள - மாசி - 10—3—78 | இதழ் 4

திருச்சிற்றம்பலம்

பொன்தயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்தயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினாய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. சம்பந்தர்.

திருச்சிற்றம்பலம்

# "சட்டமும் நடைமுறையும்"

**சாகுபடி நிலை :**

தமிழகத்தின் திருக்கோயில்களும், திருமடங்களும் பெரும்பாலும் நிலவருவாயை நம்பி இயங்கி வருகின்றன. அறநெஞ்சம் படைத்தவர்களால் இவற்றிற்கு வழங்கப்பெற்ற நஞ்சை புஞ்சை நிலங்களைப் பண்ணைசாகுபடி செய்து வருவாய் பெற அறநிலையங்களுக்கு இயல்வதில்லை. எனவே, இவ்வறநிலையத்தின் உரிமைநிலங்கள் அப்பகுதியில் வாழும் சாகுபடியாளர்களுக்குக் குத்தகைக்கு விடப்பெற்று உள்ளன. ஒருமாவிற்கு ஆண்டு ஒன்றுக்கு ஒன்றரை கலத்திலிருந்து நாலரை அல்லது ஐந்து கலம்வரை திட்டமான குத்தகையாகவோ, அல்லது விளைவில், பத்து கலம் விளைந்தால் உழுபவருக்கு ஆறு கலமும், அறநிலையங்களுக்கு நாலுகலம் என்ற வாரமுறையிலோ குத்தகைப்பத்திரம் எழுதிப்பெற்றுக்கொண்டு இந்நிலங்கள் சாகுபடியாளரிடம் பயிரிட ஒப்படைக்கப் பட்டுள்ளன.

**கடமையும் பொறுப்பும் :**

மக்கள் நலங்கருதி இயங்கும் இவ்வறநிலையங்களுக்குக் குத்தகை தாரர்கள் உரியபங்கைப் பல ஆண்டுகளாகப் பல்வேறுகாரணங்களால் கொடுப்பதில்லை என்பதை 'ஞானசம்பந்தம்' அவ்வப்போது சுட்டிக் காட்டி வருவதை அன்பர்கள் அறிவர். சாகுபடிசெய்வதற்காக அற நிலையங்களிடமிருந்து பெற்ற நிலங்களைத் தாமே சாகுபடி செய்யவும், தமக்குப்பின் தம் வாரிசுகள் சாகுபடி செய்யவும் மட்டுமே குத்தகை தாரருக்குச் சட்ட பூர்வமான உரிமையுண்டு. அறநிலையங்களின் நிலங்களை எந்த ஒரு குத்தகைதாரரும், இன்னொருவரிடம் விற்கவோ, அடமானம் வைக்கவோ சட்டபூர்வமான உரிமையைப் பெற்றிருக்க வில்லை. ஆனால், இன்றுள்ள நடைமுறையில் இம்முறை மீறப்பட்டு உள்ளதோடு, அறநிலையங்களின் நிலங்கள் எவ்வாறெல்லாம் கை மாறு கின்றன என்பதனை விளக்கவேண்டிய கடமையும், அரசின் கவனத்திற்கு இவற்றைக் கொண்டுவர வேண்டிய பொறுப்பும் நமக்கு உள்ளன.

**ஒருதலையங்கப் பகுதி :**

இது குறித்து மார்ச்சு ஐந்தாம் தேதியிட்ட மதுரை தினமணி நாளிதழில் எழுதப் பெற்றிருக்கும் தலையங்கத்தின் சிலபகுதிகளை• நிலைமையை விளக்குவதற்காகக் கீழே கொடுத்துள்ளோம்.

> "ஒரு நிலச்சுவான் தனது நிலத்தை "வாரம்" அல்லது குத்தகை ஏற்பாட்டுடன் மற்றொருவரிடம் சாகுபடிக்கு விட் டால் பயிர்செய்யும் அந்தக் குடியானவர் தொடர்ச்சியாகப் பயிர்செய்துவரலாம் என்பது சட்டம். நிலத்தைச் சீர்கெடுப்ப தாகவோ, வாரத்தைச் செலுத்தாமல் இருந்தாலோ மட்டும் நிலச்சுவான் அந்த நிலத்தை மீட்டு வேறொருவரிடம் சாகு படிக்குவிடலாம், அல்லது சொந்தமாகவே சாகுபடிசெய்ய லாம். இதுதான் சட்டபூர்வமான நிலைமை"

**இரண்டு சட்ட மீறல்கள் :**

சட்ட பூர்வமான நிலைமையை விளக்கிய தினமணி தலையங்கம், நடைமுறையில் அறநிலையத்தின் நிலங்களைக் குத்தகைக்குப் பெற்றுக் கொண்டிருக்கும் விவசாயிகள் மேற்கொண்டுவரும் சட்டமீறலான செயல்களையும் விளக்குகிறது.

> " இப்போது இந்தவிஷயத்தில் சட்டத்துக்குப்புறம்பாக இரண்டு காரியங்கள் நடக்கின்றன. (1) குடியானவருக்கு (சாகுபடிக்குச் சம்பந்தமில்லாத) அவசரச் செலவு ஏற்படும்

போது ஏக்கருக்கு இத்தனை ரூபாய் என்றபாணியில் நிலச் சுவானிடம் பணம் பெற்றுக்கொண்டு, சாகுபடி உரிமையைக் கைவிடுவதுஒன்று. (2) நிலச்சுவானுக்குச் சம்பந்தமில்லாமல், அனுமதி இல்லாமல், நிலச்சுவானுக்குத் தெரியாமலேகூட, சாகுபடியாளர், வேறொருவர் பேருக்குச் சாகுபடியை மாற்றிக் கொடுத்து அதற்கு "விலை பெறுவது" என்பது மற்றொன்று"

**கவனிக்கவேண்டிய ஒரு தொடர் :**

இவ்விரண்டு ஒழுங்கீனங்கள் பற்றியும், இவற்றால் நிலவுடைமை யாளர் அடையும் இழப்புக்களையும் மேலும் கூறுகையில்,

> "முதலில் சொன்னது சட்டத்திலுள்ள சீர்திருத்த நோக்கத்திற்குப்புறம்பாக 'லாபமடிக்கும்" காரியம். ஆனால், அது நிலச்சுவானுக்குத் தெரிந்து 'சம்மதத்துடனேயே' நடக்கும் காரியம் என்று விட்டுவிடலாம்."

மேற்கண்ட வரிகளில், சட்டத்திலுள்ள சீர்திருத்த நோக்கத்திற்குப் புறம்பாக, என்ற தொடர் ஊன்றி நோக்கத்தக்கது. உழுபவனிடமே நிலம் இருக்கவேண்டும் என்பது சட்டத்தின் நோக்கம். ஆனால், குத்தகைதாரர்கள் தேவைகருதி குத்தகையைக் காசுக்காக விட்டு விடும் அவலநிலைசட்டத்தின் நோக்கத்திற்குப்புறம்பானது என்பதைக் கவனிக்கவேண்டும். அடுத்த தவறுபற்றி எழுதும் தினமணி,

> "இரண்டாவதாகச் சொன்னது - அதாவது பணம் வாங்கிக்கொண்டு, சாகுபடியை மற்றொருவருக்கு (நிலச் சுவானின் சம்மதமின்றி) மாற்றுவது (Sub-Letting) சட்டத் திற்கு முற்றிலும் மாறுபட்டதாகும் இதுபற்றிக் கிராமாந் தரங்களில் என்ன நடக்கிறது என்பதையும், வாரம் வசூலிப் பதிலுள்ள கஷ்டத்தையும், நிலத்தை விற்க விரும்பும் நிலச் சொந்தக்காரரின் அவதியையும் எடுத்துக்காட்டும் முறையில் வாசகர் எழுதியுள்ள கடிதம் 8-ம் பத்தியில் பிரசுரமாகி யுள்ளது. இதை அரசின் சட்ட இலாகா கவனிக்க வேண்டும்."

**ஒருநிலையை விளக்கும் கடிதம் :**

பாளையங்கோட்டை அன்பர் ஒருவர் எழுதியகடிதத்தை அதே நாளில் தினமணி வெளியிட்டுள்ளது. அக்கடிதம் இரண்டாவதாகக் குறிப்பிடப்பட்ட சட்ட மீறலாகிய முறை கேட்டால் நிலவுடைமை யாளருக்கு விளையும் பல தொல்லைகளையும் விளக்குகின்றது. அக்கடிதத்தில்,

1. நிலஉடைமையாளருக்குத் தன் வயலை யார் பயிரிடுகிருர் என்பது தெரியாமல் போய்விடுகிறது. விவரம் விசாரித்தறியவே வேண்டும். அவரைத் தேடிப்பிடித்து குத்தகையை வசூலித்தாகவேண்டும்.

2. சப்-ரிஜிஸ்திரார் ஆபீசில் ஒவ்வொரு சர்வே எண் பேரால் எந்த நடவடிக்கை ரிஜிஸ்தர் செய்யப்பட்டாலும் பதிவு செய்யப்படும். குறிப்பிட்ட சர்வேஎண் பயிரிடுகிற சம்சாரியால் (சாகுபடியாளர்) மற்ருெருவருக்குக் கிரயம் செய்துகொடுத்து, பயிரிடுகிற உரிமை ரசீதும் அப்படிப் பதிவு செய்யப்பட்டிருக்கும். நில உடைமையாளர் அந்த நிலத்தை விற்கவேண்டிய அவசியம் நேரும்போது, அந்த நிலத்திற்கு வில்லங்க சர்ட்டிபிகேட் பெற்று சோதித்துப் பார்த்து கிரயம் வாங்குவார். அப்படிச் சோதிக்கும் போது இந்தப் பாத்தியதை ரசீது மூலமாக, அந்த சம்சாரி துலங்குவார். அவரைத்தேடிப்பிடித்து அவரும் விடுதலை எழுதித்தந்தால் மட்டுமே புதிதாகக் கிரயம் வாங்குபவர் முன்வருவார். கிரயம் செய்து கொடுக்கும் ஆசாமியின் அவசரத்தைக் கவனித்து சாகுபடியாளரின் ரேட் ஏறும்"

என எழுதும் பாளையங்கோட்டை அன்பர் குத்தகை உரிமை எதிலே போய் முடிகிறது என்பதையும் கூறுகிருர்.

**அரசின் கடமை:**

"நிலம்பயிரிடும் உரிமைஎன்ற பெயரால் ஆரம்பித்த நடவடிக்கை நிலபாத்தியதையிலும் பங்கு என்று வந்துவிட்டிருக்கிறது" என்பதைச் சுட்டிக்காட்டுகின்ருர். 'சட்ட அமைச்சர் கவனிக்க' என்ற மேற்கண்ட தினமணி தலையங்கம் அரசை சில விளக்கங்களைத் தெளிவுபடுத்த வேண்டுகிறது.

"சாகுபடி மாற்றப்படும்போது அது ரெஜிஸ்டர் ஆபீசில் அல்லது ரெக்கார்டு பதிவு அதிகாரியால் ரெஜிஸ்டர் செய்யப்படுவதாகவும் தெரிகிறது. அவ்வாறு ரெஜிஸ்டர் ஆபீசுக்கு அந்த 'கிரய சாசனம்' வரும்போது, அந்தச் சாகுபடி மாற்றத்திற்கு நிலச்சுவான் சம்மதித்துள்ளாரா என்பதையும் தெரிந்துகொள்வது அவசியம். நிலச்சுவானின் சம்மதம் இல்லை என்ருல் ரெஜிஸ்டார் அல்லது ரெக்கார்டு அதிகாரி அதை ரிஜிஸ்டர் செய்யக்கூடாது என்பது தெளிவு படுத்தப்படவேண்டும்."

எனத் தினமணி அரசினை வேண்டுகின்றது. அறநிலையங்களின் நிலங்கள் இன்று இவ்வாருன கைமாற்றங்களுக்கு உட்பட்டுக் கிடப்பதை அரசும் தமிழகத்திலுள்ள தெய்வபக்தியுள்ளவர்களும் அறிந்து கொள்ள வேண்டுமென்பதே ஞானசம்பந்தத்தின் நோக்கம்.

**நோக்கமும் நடப்பும்:**

அரசு ஏழை எளிய மக்களை சுரண்டல்களிலிருந்து வாழ வைக்கும் கடமையுடையது. பதினைந்து இருபது விழுக்காடு வட்டி வாங்கிய லேவாதேவிக்காரர்கள் பிடியிலிருந்து அவற்றிற்குக் குறைந்த வட்டியில் கடன்வழங்கி மக்களை அரசு முன்னேற்றுகிறது. அதுபோல இன்னொருபக்கத்தில், உழுது பயிர்செய்து உயரவேண்டிய குடிமக்கள் பலர் உழுவதற்குரிய நிலங்களையே பல்வேறு காரணங்களால் இழந்துவிடும் நிலைமையினையும் அரசு கவனிக்கவேண்டும். வசதிமிகப் படைத்தவர்கள் குத்தகையாளரிடம் இருக்கும் நிலத்தை இவ்வாறு தமதாக்கிக்கொண்டு உழவர்களையும், நிலஉடமையாளர்களையும் ஏமாற்றுவதை அரசு கண்காணித்தல் இன்றியமையாதது. இவ்வாறான நிலவுடைமை மாற்றங்களால் நிலவுடமையாளர்களைவிட ஏழை உழவர்களே பெரிதும் பாதிக்கப்படுகின்றனர்.

**மீண்டும் வேண்டுகிறோம்:**

தமிழக அறநிலையங்களின் நிலங்களை உரியவகை மீட்பதிலும் உரியகுத்தகைகளை அறநிலையங்கள் பெறச்செய்வதிலும் அரசும் அறநிலைய இலாகாவும் ஆவனசெய்யவேண்டும். தமிழக முதல்வர் அறநிலைய இலாகாவை, பிழை ஏதும் நேர்ந்துவிடாதவாறு தாமே மேற்கொண்டிருக்கிறார். 104 லட்சம் ஏக்கர் விளைநிலமுள்ள தமிழகத்தில் அறநிலையங்களின் நிலங்கள் 4 லட்சம் ஏக்கருக்குள்ளாகத்தான் உள்ளது. ஆந்திரம், குஜராத் போன்றமாநிலங்கள் அறநிலைய நிலங்களுக்கு விதிவிலக்குகளை அறிவித்துள்ளதாக அறிகிறோம். தமிழக அரசு பல லட்சம் மக்களின் வாழ்வின் வேராக விளங்கும் பக்திப்பயிர் வளர்க்கும் அறநிலையங்களின் நிலங்களை மீட்டுத் தருவதோடு, தக்க அறிஞர்களைக்கொண்ட குழு ஒன்றை விரைவாக அமைத்து, நிலவருவாயை நம்பி நடைபெறும் இந்நிலையங்களின் கஷ்டங்களைக் கண்டறிந்து, உடனடி நிவாரணத்திற்கு வழிகோல வேண்டும் என்று மீண்டும் வற்புறுத்திக் கேட்டுக் கொள்ளுகின்றோம்.

உழுபவர்களிடமே நிலம் இருக்கவேண்டும் என்ற அரசின் எண்ணத்திலேயோ, உழுவார் உயரவேண்டுமென்ற உயரிய நோக்கத்திலேயோ அறநிலையங்களுக்கு மாறுபட்ட கருத்து ஏதும் இல்லை. என்றாலும், அறநிலையங்களின் உரிமை பாதிக்கப்படுவதையும், உரிய வருவாயை அவை பெறுவதற்கு ஏற்படுத்தப்படும் செயற்கையான தடைகளையும் நீக்கும் கடமையும் பொறுப்பும் அரசுக்கு உண்டு என்பதைச் சுட்டிக் காட்டுவதோடு, இக்குறைகளை அரசு நிவர்த்தி செய்ய ஆவன செய்யுமென்றும் ஞானசம்பந்தம் நம்புகிறது.

உ

குருபாதம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்

26-ஆவது குருமகாசந்நிதானம்

## ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

வழங்கியருளிய

# * ஆசியுரை

## தாயுமானவர் சமரச நெறி

" வேதாந்தம் சித்தாந்தம் வேறென்னுர் கண்களிக்கும்
நாதாந்த மோன நலமே! பராபரமே "

**எது சமரசம் :**

சப்த மாத்திரத்தால் மக்களைக் கவரும் சொற்கள் சில உண்டு. அவற்றின் உண்மையான பொருள் என்ன என்பது பற்றிச் சிறிதும் சிந்தனை இல்லாமலே மக்கள் அச்சொற்களில் ஈடுபடுவார்கள். அத்தகைய சொற்களில் " சமரசம் " என்பதும் ஒன்று.

" சமரசம் " என்ருல், அனைத்துப் பொருள்களையும் ஒரே வகையாக வேறுபாடின்றி அஃதாவது உயர்வு தாழ்வு பாராட்டாமல் எல்லாவற்றையும் எடுத்துக்கொள்வது எனப் பொதுவாக மக்கள் நினைக்கின்ருர்கள். 'சமரசம்' என்பதன் உண்மைப் பொருள் இதுவா என்று பார்க்க வேண்டும்.

" விலங்கொடு மக்கள் அனையர் " என்றும், " பொன்னே டிரும் பனையர் " என்றும், " வேம்பினேடு தீங்கரும்பு விரவி " என்றும் மற்றும் இவ்வாறு சொல்லப்படுவன பலவும் பொருள்களின் தரமறிந்து அவற்றைக்கொள்ளல்வேண்டும் என்பதையே வலியுறுத்திநிற்கின்றன.

அவற்றிற்கு மாருக, 'விலங்கும் மக்களும் ஒரு தன்மையரே என்றும், 'பொன்னும் இரும்பும் ஒருதரத்தனவே' என்றும், 'வேம்பும் கரும்பும்' ஒரே சுவையுடையன' என்றும் கூறுபவரோ

---

* அகில இந்திய வானெலியில் திருச்சி நிலயத்திலிருந்து 'நெறி விளக்கம்' என்ற தலைப்பில் தாயுமானவர் நெறிபற்றி 7—2—1978 அன்று வழங்கியதைத்தழுவியது. வானெலி நிலயத்தாரின் அனுமதியுடன் வெளியிடப்பெற்றது.

அல்லது கொள்பவரோ ஒருவரும் இல்லை. ஆனல் மக்களும், பொன்னும், கரும்புந்தரீன் உலகத்தில் இருத்தல்வேண்டும்; மற்றைய விலங்கு, இரும்பு, வேம்பு இவை உலகத்தில் இருத்தல் கூடாது என்பதில்லை. 'சிறு துரும்பும் பல்லுக்குதவும்' என்பது போல எல்லாப் பொருளும் தேவைதான். ஆனல் தேவையே பொருளின் தரத்தை மாற்றி விடாது என்பதைச் சமரசம் பேசுகின்றவர்கள் நினைவில் வைக்கவேண்டும்.

'சமரசம்' என்பது தாயுமானவர் பாடலில் ஆங்காங்கும் பரவலாகவே காணப்படுகின்றது. சமய நெறியில் சமரசத்தை முதற்கண் காட்டினவர் தாயுமானவரே ஆவர். ஆயினும் அவரது சமரசம் மேற்கூறியது போலச் சிந்தனைக்கே வேலையில்லாத ஒரு சமரசம் அன்று.

**இதுதான் உண்மைச் சமரசம் :**

சமரசம் ஒரு நல்ல பண்பே. ஆனல், அதற்குத் தவறான பொருள் கொண்டுவிடக் கூடாது. ஒரு குடும்பத் தலைவனுக்கு அதில் உள்ள எல்லாரையும் சமமாகப் பாவிக்கும் பண்பு வேண்டுவதுதான். ஆனல் தந்தை, மகன், அண்ணன், தம்பி, தாய், மனைவி, தமக்கை, தங்கை என்ற எல்லோரிடத்திலும் ஒரே வகையாக அவன் இருத்தல் வேண்டும் என்று யாரேனும் கூறுவார்களோ? அதுபோலத் தான் எல்லாப் பொருளிலும் கொள்ளவேண்டும். அதாவது எந்தப் பொருளிலும் காய்தல், உவத்தல் கொண்டு அதன் தரத்தைக் குறைத்தோ அல்லது உயர்த்தியோ மதித்தல்கூடாது. அதனதன் தரத்திற்கு உரிய மதிப்பை அவற்றிற்குத் தரல்வேண்டும். அதோடு எந்தப்பொருளையும் தனது விருப்பு வெறுப்பினல் அழிக்கவோ ஆக்கவோ கூடாது. அதனதன் தரத்தில் அதையதை வாழவிட வேண்டும். இதுதான் உண்மைச் சமரசம்.

**தாயுமானவரது நெறியும் சித்தாந்த நெறியே :**

திருவள்ளுவர் பொதுவாகப் பலர் நினைக்கின்ற சமரசத்தை "பொது நோக்கு" என்றும், உண்மைச் சமரசத்தை "வரிசை நோக்கு" என்றும் வைத்து, அரசனுக்குப் பொதுநோக்குமட்டும் இருந்து வரிசை நோக்கு இல்லாவிடின் அவன் நாட்டில் உயர்ந்தோரும், நல்லோரும், திறமை மிக்கவர்களும் இருக்கமாட்டார்கள் என்றும் வரிசை நோக்கு இருந்தால், எல்லோரும் அவனைச் சேர்ந்து வாழ்வர்; ஒருவரும் அவனை விட்டு நீங்கமாட்டார்கள் என்றும் கூறுகிறர்.

"பொதுநோக்கான் வேந்தன் வரிசையான் நோக்கின்
அதுநோக்கி வாழ்வார் பலர்"

என்பது அக்குறள். இக்குறளின் கருத்தைப் பிற்காலப் புலவர் ஒருவ

"தராதரம் அறிந்து முறை செய்யாத மன்னரைச்
சார்ந்தென்ன நீங்கில் என்ன"

என்று எளிய நடையில் கூறினர். இம்முறை எல்லாவற்றிலும் வேண்டுவதாயினும், மிக உயர்ந்த பயனுகிய ஆன்மீக லாபத்தைத் தருகின்ற சமயத்துறைக்கு இது மிகமிக இன்றியமையாதது. இல்லையேல், ஒன்றும் அறியா மக்களை நாம் அவர்களது அறியாமை வழியிலேயே செல்லும்படி செலுத்துகின்றவராவோம். சமயக்காழ்ப்புக் கூடாது; ஆனால், அதனதன் நிலைமைகளை உள்ளவாறு மக்கட்கு எடுத்துக் காட்டவேவேண்டும். 'சமரசம், சமரசம்' என்று பல இடங்களில் கூறுகின்ற தாயுமானவர் இவ்வாறு சமயத்தின் உண்மை நிலைகளை எடுத்துக்காட்டாது போகவில்லை.

தாயுமானவர் காலத்தில் தமிழ்நாட்டில் மேலோங்கியிருந்த சில சமய வேறுபாடுகள் வேதாந்தம், சித்தாந்தம் - சைவம், மற்றும் பிற சமயங்களும் ஆகும்; தாயுமானவரது நெறிமரபு சித்தாந்த நெறிமரபே என்பது தெளிவாகையால், அவரது நெறியும் சித்தாந்த நெறியே என்பதைச் சொல்ல வேண்டுவதில்லை.

**வேதாந்த சித்தாந்த சமரசம் :**

வேதாந்த சித்தாந்தங்களைப் பற்றி நன்கு உணராமலே தம்மை 'வேதாந்திகள்' என்றும் 'சித்தாந்திகள்' என்றும் சொல்லிக்கொண்ட பலர் 'வேதாந்தமாவது ஏகான்மவாதமே' என்றும், 'அத்துவிதம்' என்பது கேவலாத்துவிதமே என்றும், 'சித்தாந்தமாவது துவைதமே' என்றும் கொண்டு இருந்தனர். அவருள், 'வேதாந்திகள்' எனப் பட்டோர் சித்தாந்தம் ஒரு பக்தி நெறியே, அதில் அத்துவிதஞானம் இல்லை என்றும், 'சித்தாந்திகள்' எனப்பட்டோர், வேதாந்தம் மாயா வர்தமாய் இம்மை மறுமை நலங்களைத் தராததோடு ஆன்ம லாப மாகிய மோட்சத்தையும் தரமாட்டாது என்றும் இன்ன பலவாகத் தம்முள் மாறுபட்டு வாதங்கள் பல செய்துவந்தனர். அதனால், தாயுமான அடிகள், வேதாந்தம், சித்தாந்தம் இரண்டும் பொருளால் ஒன்றே ; அதைக்கூறும் முறைதான் வேறு. உண்மையை வேதாந்தம் பொதுவாகச் சுட்டுகின்றது. சித்தாந்தம் அதனைச் சிறப் பாக விளக்குகின்றது. இதனை அறிந்தவரே உண்மை வேதாந்திகளும் உண்மைச் சித்தாந்திகளும் ஆவர். அவர் தமக்குள் முரண்பட்டு நில்லார். இதை அறியாது வேறு கருத்துக்கொண்டு பூசலிடுதலால் ஒருவருக்கும் பயனில்லை. ஆகவே, மேற்கூறிய கருத்தால் வேதாந்த சித்தாந்த சமரசம் காண்பவரது நிலையே நன்னிலையாகும் என விளக்கிவந்தார். அவரது பாடலில்,

"வேதாந்த சித்தாந்த சமரச நன்னிலை பெற்ற
வித்தகச் சித்தர் கணமே"

"………வேதாந்த சித்தாந்த
சமரச சிவானுபூதிமன்ன"

என்பன போன்றவை நினைவிற்கொள்ளத்தக்கன.

**அனைத்துச் சமயங்களும் இறைவனால் வகுக்கப்பட்டவையே:**

சித்தாந்தத்தை 'துவிதமே' என்று கொண்ட அந்த வேதாந்திகளில் சிலர், பொதுவாகச் சித்தாந்தத்தைப் புறக்கணித்ததோடு அதிற் சொல்லப்பட்ட சரியை முதலிய தவநெறிகளையும் புறக்கணித்து ஒதுக்குவாராயினர். இது தாயுமானவர்க்குப் பெரிதும் வருத்தத்தை அளித்தது. துவைதத்திலிருந்துதான் அத்துவைதத்திற்குச் செல்லவேண்டும் என்பது எல்லார்க்கும் ஒத்த முடிபு. இதை வேறொரு கருத்தில் மேற்கூறிய வேதாந்திகளும் சொல்லளவில் உடன்பட்டே வந்தனர். அதனால் தாயுமானவர், 'எத்தகையோரும் சரியையாதி தவங்களைப் புறக்கணியாது கைக்கொள்ளல் வேண்டும்' என்று இரு சாரார்க்கும் பொதுப்பட, சமரச நிலையில் நயம்பட விளக்கி வந்தார். அவைகளில் ஒருபாடல் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது.

"வேதமுடன் ஆகம புராண இதிகாசமுதல்
வேறுமுள கலைகள் எல்லாம்
மிக்காக அத்துவித துவிதமார்க் கத்தையே
விரிவாய் எடுத்துரைக்கும்
ஓதரிய துவிதமே அத்துவித ஞானத்தை
உண்டுபணும் ஞானமாகும்
ஊகம் அனுபவம் வசனம் மூன்றுக்கும் ஒவ்வும் ஈது
உபயவா திகள் சம்மதம்
ஆதலின் எனக்கினிச் சரியையா திகள்போதும்
யாதொன்று பாவிக்க நான்
அது ஆதலால், உன்னை நான் என்று பாவிக்கின்
அத்துவித மார்க்கம் உறலாம்
ஏது பாவித்திடினும் அதுவாகி வந்தருள்செய்
எந்தைநீ குறையும் உண்டோ
இகபரம் இரண்டினிலும் உயிரினுக் குயிராகி
எங்கும் நிறைகின்ற பொருளே"

மற்றும்,

" பஞ்சசுத்தி செய்து நின்னைப் பாவித்துப் பூசைசெய்தால்
விஞ்சிய ஞானம் விளங்கும் பராபரமே "

" விரும்பும் சரியைமுதல் மெய்ஞ்ஞானம் நான்கும்
அரும்புமலர் காய்கனிபோல் அன்றோ பராபரமே "

" மூர்த்திதலம் தீர்த்தம் முறையாய்த் தொடங்கினர்க்கோர்
வார்த்தைசொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே "

என்பன போன்றவற்றால் அடிகள் தவநெறியைப் பலர்க்கும் வலியுறுத்தினர்.

" சைவம் முதலாம் அளவில் சமயமும் வகுத்து, மேல்
சமயம் கடந்த மோன
சமரசம் வகுத்த நீ, உன்னை நான் அணுகவுந்
தண்ணருள் வகுக்க இலையோ "

என்னும் பகுதியால், 'அனைத்துச் சமயங்களும் உயிர்களின் பக்குவ பேதம் நோக்கி இறைவனால் வகுக்கப்பட்டவை' என்பதே அடிகள் கருத்து என்பது நன்கு விளங்கும். ஆதலால் அவரது சமரசநெறியின் தன்மையும் இனிது விளங்கும்.

---

## EXTRACT FROM THE VISITOR'S BOOK

**Dharmapuram Adhinam**

**Sri Sattanathaswami Devasthanam, Sirkazhi.**

We, the residents of Raja Annamalai Puram Numbering 50 visited the temple, and all the temple and office staff received as courteously and made the darsan for all of us in a charming way and we thank them for all the courtesy shown to us.

(S-d.) M. V. Parameswaran,

19—2—78

Raja Annamalai Puram,
Madras - 28

# இறைவனின் இன்னருட்டிறன்

" சித்தாந்தப்புலவர்மணி "

திரு. ந. ரா. முருகவேள் M. A., M. O. L.,

**முன்னுரை :**

ஓர் ஊரில் ஒருபெரும் நிலக்கிழார் இருந்தார். அவருக்குத் தலையில் முடி சிறிதும் இல்லாமல், வழுக்கை விழுந்திருந்தது. அவர் ஒருநாள் தமது மாளிகையின் முற்றத்தில், வெயிலில் காயவைத்த நெல்லைத் துழாவிஅளந்துகொண்டு நின்றிருந்தார். அப்போது அங்கே ஒருவன் சென்று "தலைமுடியைப் பேணுமல் இங்ஙனம் தனியே நின்று கடும்வெயிலில் எற்றுக்கோ நெல்லைத் துழாவி அளந்துகொண்டு நின்றுளீர்?" என்று உசாவினுன். அது கேட்ட அந்நிலக்கிழார், அவனதுமுகமனுரைக்கு மிகவும்மகிழ்ந்து அன்புபாராட்டி, "இவ்வளவு தூரம் எங்கு நடந்து வந்தீர்?" என்று வினவினுர். அதற்கு அவன், "ஒன்றுமில்லை, நும்மைக் கண்டுபோக வந்தேன்" என்ருன். தம்மிடம் பெரிதும் அன்புகொண்டு, தம்மைப் பார்த்துச் செல்வதற்கென்றே, அவன் வந்திருப்பதாக எண்ணி உவகையுற்ற அப்பெரு நிலக்கிழார், "இவ்வளவுதூரம் வந்தீரே, இங்கிருந்து ஒரு கோட்டை நெல் கொண்டு போகலாகாதோ" என்று பரிவுடன் கூறி, அவனுக்கு ஒரு கோட்டை நெல் எடுத்து அனுப்பிவைத்தார். அவன் அதை எடுத்துக்கொண்டு போகும் வழியில், எதிரே வந்த ஒருவன், "இது எங்கே பெற்றது?" என்று வினவினுன். அதற்கு அவன், அவ்வழிப் போக்கன்பால் சற்று வெறுப்புடன், "உன்னைப்போல ஒருமொட்டைத் தலையன் தந்தான்" என்று சொல்லிவிட்டுத் தன்வழியே சென்ருன்.

அதுகேட்ட வழிப்போக்கன், உடனே விரைந்து ஓடிச்சென்று, அப்பெருநிலக் கிழாரிடம், 'இன்னுன் உன்னை வைதுபோகா நின்ருன்' என்று புறங்கூறிச் சினம் உண்டாக்கினுன். அவ்வளவில் அந்நிலக் கிழார் "என் நெல்லையும்கொண்டு, தன்னையும் வைது போவதே?" என்று, தன்னைஇகழ்ந்து சென்றவனைப்பிடிக்கப் பின்தொடர்ந்துஓடினுர் அதைக்கண்ட அவன் நிலைமையைப் புரிந்துகொண்டு, தப்பும் வழி ஆராய்ந்து, தனது சமயோசித புத்தியினுல், "ஏன்தான் நும் நீண்டு வளர்ந்த அடர்ந்த குழல்கள் அலைய அலைய, இங்ஙனம் நீர் ஓடி வரா நின்றீரோ?" எனப் பரிவு தோன்ற வினவினுன். அவனது போலிப் பரிவுரையைக் கேட்ட அளவிலேயே, இந்நிலக்கிழார் தம் சினம்

தணிந்து மகிழ்ந்து, தாம் தொடர்ந்துவந்த காரணம் இன்னதெனச் சொல்ல நாணமுற்றவராய், "ஒன்றுமில்லை, இன்னும் ஒருகோட்டை நெல் கொண்டுபோகச் சொல்ல வந்தேன்" என்று மொழிகுழறி உரைத்துத் திரும்பினர்.

**திருவாய்மொழி :**

இச்சிறிய புனைகதையைப் பட்டர் என்னும் வைணவப் பெருஞ் சான்றோர், திருவாய்மொழிப் பாசுரம் ஒன்றற்கு உரைவிளக்கம் செய்யும்போது, அழகுற எடுத்துச்சொல்லி, இறைவனது இன்னருளின் திறத்தை, நமக்கு நயமுற விளக்குகின்றார்.

" திருமலையிலே நித்தியவாசம் செய்தருளுகின்ற பெருமானுக்கு' நம (வணக்கம்) என்று சொல்லுவதாகிற அந்தக் கடமையைவகிக்கின்ற வர்களுக்கு, அனுபவித்தே தீர்க்கவேண்டிய பழைய பாவங்களும், இனிமேல் விளையக் கூடிய புதிய பாவங்களும் ஆகியன அனைத்தும், வெந்து தொலைந்தொழியும். இங்ஙனம் பாவங்கள் தொலையவே, அடியவர்களான தாங்கள் தங்கள் இயல்பிற்குத் தகுதியான கைங்கர்யங்களைச் செய்துகொண்டு வாழ்ந்திருக்கப் பெறுவார்கள்" என்னும் கருத்தை,

**" வேஙங் கடங்கள் மெய்ம்மேல் வினைமுற்றவும்,**
**தாங்கள் தங்கட்கு நல்லனவே செய்வார்'**
**வேங்கடத்துறை வார்க்கு நமவென்னல்**
**ஆஅங்கடமை, அதுசுமந்தார் கட்கே "**

என்னும் திருவாய்மொழிப் பாசுரத்தில், பிரபத்தி நெறியைப் பின் பற்றும் பக்தர்களுக்குத் தலைவரான நம்மாழ்வார், நன்கினிது எடுத்துப் பாடி, உபதேசித்தருளுகின்றார்.

**ஆளவந்தார் :**

இப்பாசுரத்தில், " **வேங்கடங்கள் மெய்ம்மேல் வினைமுற்றவும்** " என்னும் வரியானது, மிகவும் முதன்மையும் பொருட் சிறப்பும் வாய்ந்தது. " அந்தணன் ஒருவன் பிறக்கும்போதே, முனிவர்களுக்கும் தேவர்களுக்கும் பிதிரர்களுக்கும் கடன்பட்டவனாகப் பிறக்கிறான். இம்மூன்று கடன்களையும் தீர்க்காமல் அவன் வீடுபேற்றை அடைதல் இயலாது. " **வேங்கடத்து உறைவார்க்கு நம** " என்று சொல்லிவிட் டால் அம் மூன்று கடன்களும் தீர்ந்துபோய்விடும் என்று இவ்வரிக்கு ஆளவந்தார் பொருள் அருளிச் செய்வர்.

**இராமாநுசர் :**

இதற்கு எம்பெருமானார் என்னும் இராமாநுசர், வேறொரு வகையில் பொருள் பணிப்பர். பாவங்களானவை பூர்வாகங்கள்

என்றும், உத்தராகங்கள் என்றும் இருவகைப்படும் எம்பெருமானைப் பற்றுதற்கு முன்பு, புத்திபூர்வமாகச் செய்த பாவங்கள் **பூர்வாகங்கள்** ஆகும். பிறகு, பிரகிருதி பாரவசியத்தாலே பிராமாதிகமாக நேரும் பாவங்கள் **உத்தராகங்கள்** எனப்படும். இவற்றையே 'போயபிழையும் புகுதருவான் நின்றனவும்' என்று ஆண்டாள் நாச்சியார் அருளிச் செய்தார். "வேங்கடத் துறைவார்க்கு நம என்று கூறுவோமாயின், பூர்வாகங்கள் ஆகிய கடன்களும், உத்தராகங்களாகிய மேல்வினை களும், முற்றவும் வேம் (முழுதும் அழிந்தொழியும்); இது மெய் (சத்தியம்)" என்பதாக, இவ்வரிக்கு எம்பெருமானுர் பொருள் அருளிச் செய்வர்.

பட்டர் :

எத்தனையோ பிறவிகளில் தொடர்ந்து செய்து, மலைமலையாகக் குவிந்துகிடக்கும் நம் பாவங்கள், "வேங்கடத்து உறைவார்க்கு நம" என்ற அவ்வளவில் தொலைந்தொழியுமோ? என்று ஒரு சிலர் இங்கு ஐயுறுவர். அங்ஙனம் ஒரு சிலர் ஐயுற்றபொழுதே, பட்டர் என்னும் வைணவப் பெரியார், மேலே குறிப்பிடப்பெற்ற சிறிய புனைகதையை எடுத்துக் கூறியருளியிருக்கின்ருர். "**இறைவன் எல்லையற்றகருணை யுடையவன் ஆதலால், நாம் அவனைச் சிறிது புகழ்ந்த அளவிலேயே மிகவும் திருப்தியடைந்து, நம் குற்றங்களையெல்லாம் பொறுத்து அருள் புரிகின்ருன். அவனது அருளில் நீர்மை இருந்தபடி இது**" என்று விளக்கியருள்கின்ருர் பட்டர். அப்பெருந்தகையாரின் அரிய நுண்ணிய கருத்தை விளக்கும் திருவாய்மொழி உரைப்பகுதி வருமாறு :

"இவ்விடத்திலே பட்டர் ஒரு இதிகாசம் அருளிச் செய்வர். பண்டு, தலையில் மயிரின்றிக்கே யிருப்பானெருவன் நெல் பரிமாரு நின்ருனாய், அங்கே ஒருவன் சென்று 'மயிரைப் பேணுதே நீர் தனியே நின்று பரிமாரு நின்றீர்' என்ன, 'ஏன் தான் நடந்ததீ என்ன, ஒன்று மில்லை; கண்டுபோக வந்தேன்' என்ன, 'ஆகில் ஒரு கோட்டையைக் கொண்டுபோகலாகாதோ ? என்று எடுத்துவிட, அவன் அத்தைக் கொண்டு வாரா நிற்கச் செய்தே, எதிரே ஒருவன் வந்து 'இது எங்கே பெற்றது ?' என்ன, 'உன்தனை மொட்டைத் தலையன் தந்தான்' என்ருனாய், அவன் அத்தைச்சென்று அங்கே 'இன்னான் உம்மைவைது போகா நின்ருனி' என்ன, 'அடா ! என் நெல்லையுங்கொண்டு என்னையும் வைதுபோவதே ?' என்று தொடர்ந்து வந்தானாய், அவன் புரிந்து பார்த்து 'ஏன்தான் ! குழல்கள் அலைய அலைய ஓடிவரா நின்றதீ ! என்ன, 'ஒன்றுமில்லை, இன்னம் ஒரு கோட்டை கொண்டு போகச் சொல்ல வந்தேன் என்ருனும். அப்படியே கடலைமுகங்

( தொடர்ச்சி 186 ஆம் பக்கம் பார்க்க )

# சிவபோகசாரம்

**வி. சா. கு.**

(மலர் 37 இதழ் 3 பக்கம் 127 - தொடர்ச்சி)

**பெறுதற்கருமை ; (பாடல். 11 - 16, )**

தற்பெருமை பாராட்டல், பிறரை எள்ளி உரைத்தல் யான் என்று செருக்குதல், வெகுளல், எனது என்று பற்றுக்கொள்ளுதல், அவர் நல்வினை தீவினைகள் என்னும் இம்மலகாரியங்கள் நீங்காதபோது இறைவன் திருவருள் கைவரப்பெற்று அவனோடு ஒன்றாய் நின்று இன்பத்து அழுந்துதல் பெரிதும் அரிது.

தன்பெருமையைத் தான் எண்ணாத பணிவும், தன்முனைப்பாகிய சிவபோதம் நீங்குதலும் மின்னல் போலக் கடிதில் தோன்றி நிலையாததாகியவுலக வாழ்வை விரும்பாமையும் தன்னுடம்பை அதன்புன்மை நோக்கி இகழ்தலும் சிவபரம்பொருளிடத்து மனம் பறிதலும் ஆகிய இவை தோன்றும் காலமே துன்பத்தைத் தரும் பிறவி நீங்குதற்குரிய காலம்.

சொல் இறந்த வழியும் நினைவு இறந்த வழியும், கருவி கரணங்களாகிய மறைப்பு இறந்தவழியுமே காணற்பாலனாகிய அவ்விறைவனை அவை இல்லாதார் ஏட்டின்கண் எழுதியவற்றைப் பெரிதும் ஓதுதலும் தோத்திரங்கள் செய்தலும் பூசனைகள் செய்தலும் போலியேயாம். மடமை வாய்ந்த மனத்தை உடையவனே! திருமால் நிலத்தைப் பிளந்து சென்று தேடியும் காணவாராத சிவபரம்பொருளாகிய மறை பொருள்; அல்லும் பகலும் காலவரைவின்றிக் குரல் கேடடையுமாறு பாழான வாயால் கூப்பிடுவதனால் காணுதற்குரியதாகுமோ! அளவிறந்த ஆகமங்களையெல்லாம் உணர்ந்தும், மிகுந்த தவம் செய்து அணிமாதி சித்திகளைப் பெற்றும் அருட்குரவனருளைப் பெற்று அவன் உணர்த்தியவாற்றின் நிற்கப்பெறுதார்க்கு அவற்றால் பயன் ஒன்றும் இல்லை. எஞ்ஞான்றும் உளதாவது மனக்கலக்கம் ஒன்றுமேயாகும்.

இறைவனிடம் முறுகியெழும் அன்பும், அவ்வன்போடு பிறப்பு வீடுகளின் துன்ப இன்பக் கூறுபாட்டுணர்வும் அவ்வுணர்வினால் பிறவிக்கு ஏதுவாகிய வினைகளை நீக்கிக் கோடற்குரிய முயற்சியும் அதனால் பேரின்பத்தைத்தரும் பரிபூரண நிலையை அடைதற்கண் வேட்கையும் உடையவர்களாய் விரைய வந்தடையும் தீவிரநிலை

உடையவர்க்கே அருளாசிரியன் உண்மை ஞானத்தை உணர்த்தி அருள்வான்.

**அறியும் பகுதி : (பாடல்: 17 - 23.)**

பிரகிருதி மாயையின் காரியங்களாகிய தூலரூப தத்துவங்களேயும், அசுத்தமாயையின் காரியங்களாகிய சூக்குமரூப தத்துவங்களேயும், சுத்தமாயா காரியங்களாகிய பரரூப தத்துவங்களேயும் நால்வகை வாக்குகளாகிய சத்தப் பிரபஞ்சங்களேயும் அவற்றின் வேருய் அவற்றிற்கு வியாபகமாகிய உயிரினேயும் அவ்வுயிரைமறைத்துநிற்கும் மலத்தினேயும் இன்பப்பொருளாக உணர்ந்து மயக்கத்தைச்செய்யும் அம்மாயாகாரியங்கள் சடமாதலின் தன்னின்வேறென்றறிந்து நீங்கி அறிவு வடிவமாகத் தற்சொருபத்தை அறிந்த தன்னே எவ்விடத்தும் விட்டு நீங்காது பொருந்திய பொருள்தானே இன்பப் பொருள் என்று உணர்தல் வேண்டும்.

மனம் முதலிய கருவிகளேத் தன்னின் வேருய சடப்பொருள் என்று அறிந்த அறிவேதானுய், அதனுல் சுட்டுணர்வு நீங்கப் பெற்றுப்பின் வியாபகமாயறியும் முதல்வன் அறிவினேத் தலைப்பட்டுப் பின் அவ்வறிவின்கண் தோன்றும் அகப்பிரமையைப் பெற்றுப் பின் அதற்கு மேலாய சிவப்பேற்றின்கண் தோன்றும் பரமானந்த வெள்ளத்தினேக்கூடிப் பின் அதன்கண் தன்னே மறந்து அழுந்தினவனே முதலும் முடிவும் அறியவாராத பரிபூரண இன்பத்தை எய்தினுேவன்.

முத்தியில் பாசம் இல்லே ஆதலால் ஆன்மாவும் சிவனும் கூடி நிற்கும்நிலே விறகும் தீயும், வெந்நீரும் சுடும், தேனும் தித்திப்பும், மலரும் மணமும், ஆகாயமும் காற்றும், கண்ணும் கதிரொளியும் எக்காலத்தும் பிரிவின்றி நிற்றல் போல்வதாம். முப்பத்தாறு தத்துவங்களேயும் ஆணவமலத்தையும் நீங்கி ஆன்மா தனியாக நின்றஇடத்தினே இன்னதெனச் சொல்லுமிடத்து அது எவ்விடத்தும் நிறைந்து நின்ற வியாபகப் பொருளாகிய சிவமேயாம். அதனேவெறும்பாழ் என்றுகருதும் கருத்தினே விட்டுக் கருவிகளோடும் கூடாது நீமாத்திரமே சென்று பற்றுவாயாக.

ஆன்மாக்கள் ஆணவத்தை அனுபவிக்கும் நிலே கேவலாவத்தை எனவும், ஐம்புலவிடயங்களே அனுபவிக்கும் நிலே சகலாவத்தை எனவும், சிவத்தை அனுபவிக்கும் நிலே சுத்தாவத்தை எனவும் கூறப்படும். சாக்கிரம் (நனவு) சொப்பனம் (கனவு) சுழுத்தி (உறக்கம்) துரியம் (பேருறக்கம்) துரியாதீதம் (மறப்பு) ஆகிய ஐந்தவத்தைகளே யும் உயிர் மேற்கூறிய கேவலம் சகலம் சுத்தம் ஆகிய மூன்று நிலே களிலும் எய்தும் சுத்தசாக்கிரம் முதலியனவாகக் கூறப்படும்

சுத்தாவத்தைகள் ஐந்தன் இறுதிக் கண்ணதாகிய அதீதத்தில் அனுபவிக்கப்படுவதாகிய பேரின்ப அனுபவத்தினைக் கனவு முதலாகக் கீழ்நோக்கிப் பிறக்கும் கேவலாவத்தைகளின் இறுதிக்கண்ணதாகிய அதீதத்தின் கண் அனுபவிக்கப்படும் அனுபவ இயல்பிற்ருக அறிந்து அச்சுத்தசாக்கிரம் முதலிய சுத்தாவத்தைகள் தோன்றும் காலத்தில் அப்பேரின்பத்தை அனுபவமாக உணர்ந்தவரே என்று ஞான்றும் மலத்தை நீங்கினராவர். தத்துவங்கள் அனைத்தையும் தனித் தனியே ஆராய்ந்து இடர்ப்படுதல் வேண்டா. தத்துவங்களாவன யாவையெனின் அவற்றது உண்மையை ஆராய்ந்து சொல்லப்புகின் ஒருகாலைக்கு ஒருகால் மிகும்பேரின்பத் தோற்றத் திற்கு ஏதுவாகிய சிவத்தில் அழுந்தாமைக்கு ஏதுவாய் முன்னிற்கும் மாயாகாரியங்கள் தாமே தத்துவங்களாம்.

ஆணவம் கன்மம் மாயை என்னும் மும்மலங்களும் கெட்டொழிய முத்திநிலை யொன்றையே பயனாகக் கருதிநிற்கும் தீவிர உணர்வுடையார்க்குப் பாசநீக்கமும் வீடுபேறுமாகிய அவ்விருவகைப் பயனும் கைகூடுதற் பொருட்டு இவ்வுலகின்கண் பலவாய்விரிந்து கிடக்கும் நூல்களையெல்லாம் பார்த்தறிதலினும் சிவஞானசித்தியின்கண் ஒரு திருவிருத்தத்தின் பாதியைப் பார்த்தலே அமையும். (தொடரும்)

---

( 183 ஆம் பக்கத் தொடர்ச்சி )

காட்டுவித்துக் கொள்கைக்காகக், காலைப்பிடிப்பது கோலைத் தொடுப்பதாக நிற்க, அவன் வந்து முகங் காட்டினவாறே, ‘உனக்கு அம்பு தொடுத்தோம்’ என்ன நாணமுற்று, ‘உன் விரோதிகளைச் சொல்லு, நாம் இதைவிட’ என்றருளிறே ” என்பது.

முடிவுரை :

இவ்வரிய இனிய உரைப்பகுதியில், இறைவனது எல்லையற்ற அருளின் இயல்பும்; ஏதனையேனும் ஒரு காரணமாக மேலிட்டுக் கொண்டு, உயிர்த் தொகுதிகளையெல்லாம் காப்பாற்றிக் கரை ஏற்றி உய்வித்தருளுதலையே விரும்புகின்ற இறைவனது திருவுள்ளத்தின் சிறப்பும்; உயிர்கள் தமது தீவினைகளையெல்லாம் எளிதில் ஒழிந்து உய்வதற்கு உரிய இனிய பற்றுக்கோடாகத் திகழ்கின்ற இறைவனது திருநாமத்தின் பெருமையும் பிறவும்; பசுமரத்தில் ஆணிபோல நம் உள்ளத்திற் பதியுமாறு விளக்கப்பெற்றிருத்தல் உணரலாம். இத்தகைய இறைவனது இன்னருளின் திறனை உணர்ந்து, அவனது திருநாமங்களை இடையறாது பல்காலும் வழுத்தி வழிபட்டு, நாம் அனைவரும் இறையருள் பெற்று, நலமெய்தி உய்ய முயலுவோமாக.

தமிழ்நாடு அரசு, கல்வித்துறை அமைச்சர்,

**மாண்புமிகு. திரு. சி. அரங்கநாயகம் M. A., B. L., B. T., அவர்களுக்கு**



தருமையாதீனம் 26-ஆவது குருமகாசந்நிதானம்

**ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள்**

பொன்னாடை போர்த்தி ஆசி அருளுதல்.

10—2—78.

தருமையாதீனம்

ஸ்ரீ குருஞானசம்பந்தர் உயர்நிலைப்பள்ளியின் புதுக்கட்டிடத்தை,



தமிழ்நாடு அரசு, கல்வித்துறை அமைச்சர்,

மாண்புமிகு. திரு. சி. அரங்கநாயகம் M. A., B. L. B. T., அவர்கள்

திறந்துவைத்தல்.

10—2—78.

# திருப்பராய்த்துறை-திருக்கற்குடி தலச் சிறப்புக்கள்

தருமையாதீனத் தமிழ்ப்புலவர்,

**வித்துவான். திரு. வி. சா. குருசாமிதேசிகர்,** எம்.ஏ.

சோழவளநாட்டில் காவிரியின் தென்கரைத் தலங்களில் 3, 4-வதாக விளங்கும் இவ்விரு தலங்களும் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் உள்ளன. திருப்பராய்த்துறை, திருச்சிராப்பள்ளி ஈரோடு இரயில்பாதையில் 15 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது. இரயில்நிலையம் உண்டு. திருச்சிராப்பள்ளியிலிருந்து கரூர் குளித்தலை செல்லும் பேருந்துகளிலும் இத்தலத்திற்குச் செல்லலாம்.

திருக்கற்குடி தற்பொழுது உய்யக்கொண்டான் என வழங்கப் படுகிறது. திருச்சிராப்பள்ளிக்கு மேற்கே 5 கிலோமீட்டர் தூரத்தில் உள்ளது. திருச்சிராப்பள்ளியிலிருந்து இத்தலத்திற்குச்செல்ல நகரப் பேருந்துகள் பலவும் உள்ளன.

**திருப்பராய்த்துறை:**

ஆறுகளின் கரையில் விளங்கும் தலங்கள் பலவும் துறை என்ற பெயருடையனவாயிருத்தலைக் காணலாம். காவிரிக்கரையில் பராய் மரக் காடுகளில் இறைவன் எழுந்தருளி விளங்கும் காரணம் பற்றி இத்தலம் பராய்த்துறை எனப்பெற்றது. பராய்மரமே இத்தல விருக்ஷ மாகும். இம்மரம் கோயிலின் மேற்குப் பிராகாரத்தில் உள்ளது. வடமொழியில் தாருகா விருக்ஷம் எனப்படும். தவம் செய்தற்கு இம் மரநிழல் சிறந்தது எனக்கூறுவர். பண்டைக்காலத்தில் தாருகாவனம் என்ற பெயருடையதாய் இத்தலம் விளங்கிற்று எனவும் தாருகா வனத்தில் இறைவன் பிக்ஷாடனராய்ச் சென்று முனிவர்களின் தன் முனைப்பை அகற்றி அவர்கட்குக் காட்சி கொடுத்தருளியது இத்தலத்திற்குரிய சிறப்பு வரலாறு எனவும் தலபுராணம் கூறுகிறது.

இத்தலத்தின் கிழக்கு எல்லையில் தவத்திரு சித்பவானந்தரின் தபோவனமும் பள்ளிகளும், மேற்கு எல்லையில் ஸ்ரீ ராமகிருஷ்ண குடிலும் பள்ளிகளும் உள்ளன.

**திருக்கோயிலமைப்பு :**

அகண்டகாவிரிக் கரையில் நாற்புறமும் சோலைகளால் சூழப்பெற்று விளங்குகிறது இத்தலம். திருச்சிராப்பள்ளி கரூர் பேருந்துச் சாலையை யொட்டி திருக்கோயில் உள்ளது. புகைவண்டி நிலையத்திலிருந்து வடக்கில் ½ கிலோ மீட்டர் தூரம்வந்தால் கோயிலை அடையலாம். கிழக்குநோக்கிய சந்நிதி. பஞ்சமூர்த்திகளின் திருவுருவங்கள் எழுந் தருளுவித்த கட்டைக் கோபுரத்தை அடுத்து தேவஸ்தான அலுவலகமும் வசந்தமண்டபமும் உள்ளன. எதிரே சிறிய திருக்குளம் உள்ளது. வசந்த மண்டபத்தில் தொடக்கப்பள்ளி நிகழ்கிறது.

வசந்த மண்டபத்தை யடுத்து எழுநிலைக்கோபுரம் கோயிலுக்கு அணி செய்கிறது. கோபுர வாயிலைக் கடந்து உள்ளேசென்றால் நந்தி மண்டபம். மண்டபத்தின் நான்கு தூண்களிலும் திருஞானசம்பந்தர் திருநாவுக்கரசர் மணிவாசகர் திருவுருவங்களும் இத்திருக்கோயிலைத் திருப்பணி செய்த நாகப்பச்செட்டியார் உருவமும் உள்ளன. வெளிப் பிராகாரத்தில் நந்தவனம் உள்ளது. மேற்குப்பிராகாரத்தில் பராய்மரம் விளங்குகிறது.

திருக்கோயிலை வலம் வந்து முதற்பிராகாரத்தை அடையலாம். முன்வாயிலில்ஐந்து நிலைக்கோபுரம் விளங்குகிறது. நாட்டுக்கோட்டை நகரத்தார் திருப்பணியால் கோயில் புத்தம் புதிய பொலிவோடு திகழ்கிறது.

முதற் பிராகாரத்தில் அறுபத்துமூவர் திருவுருவங்களும் விநாயகர் முருகன் மகாலக்ஷ்மி துர்க்கை ஆகிய பரிவார தெய்வங்களும் நவக் கிரகங்களும் உள்ளனர். கர்ப்பக்கிருகக் கோஷ்டங்களில் தக்ஷிணா மூர்த்தி அர்த்தநாரீசுவரர் முதலியோர் எழுந்தருளுவிக்கப் பெற்றுள்ளனர்.

சுவாமி சந்நிதி கிழக்கு நோக்கியும் அம்பாள் சந்நிதி தெற்கு நோக்கியும் உள்ளன. மகா மண்டபத்தில் அம்பாள் சந்நிதிஉள்ளது. ஸ்நபன மண்டபத்தில் பஞ்சமூர்த்திகள் விளங்குகின்றனர். சுவாமி சந்நிதியில் நிற்கும்போது ஞானசம்பந்தரும் அப்பரும் மணிவாசகரும் இவ்விறைவனைப் பாடிப் பரவியநிகழ்ச்சிகள் நம் நினைவிற்கு வரும்.

" செல்வம் மல்கிய செல்வர் பராய்த்துறை
செல்வர்மேற் சிதையாதன
செல்வன் ஞான சம்பந்தன செந்தமிழ்
செல்வமாம் இவை செப்பவே "

என்பது இத்தலத் தேவாரங்களில் ஒன்று. திருஞானசம்பந்தர் பாடிய இத் தலத்தேவாரத் திருப்பதிகத்தை ஓதி வழிபடுவார்க்கு உண்டாகும் பயனை அறிவிக்கும் பாடல் இது.

அம்பாள் சந்நிதியை அடைந்து பசும்பொன் மயிலம்மையை வழிபடுகிறோம்.

" குயிலா யிருக்கும் கடம்பா டவியிடைக் கோலஇயல்
மயிலா யிருக்கும் இமயா சலத்திடை வந்துதித்த
வெயிலா யிருக்கும் விசும்பில் கமலத்தின் மீதன்னமாம்
கயிலாய ருக்கன்று இமவான் அளித்த கனங்குழையே."

என்ற அபிராமி அந்தாதியை ஓதி வழிபட்டு நலம்பெறலாம்.

**மூர்த்திகள் :**

சுவாமிபெயர் அருள்மிகு பராய்த்துறைநாதர். வடமொழியில் தாருகாவனேஸ்வரர். அம்பிகை பெயர்:- அருள்மிகு பசும்பொன் மயிலம்மை. வடமொழியில் ஹேமவர்ணாம்பிகை. பஞ்சமூர்த்திகள் பிக்ஷாடனர் மற்றும் சந்திரசேகரர் நடராசர் திருவுருவங்கள் உள்ளன.

**தீர்த்தம் :**

காவிரி நதி. கோயிலுக்குள்ளும் ஒரு தீர்த்தம் இருக்கிறது. ஐப்பசி மாதம் முதல் தேதியன்று இறைவன் இடபவாகனத்தில் அம்பிகையோடு எழுந்தருளிக் காவிரியில் தீர்த்தம் கொடுத்தருளுவார். தலவிருக்ஷம் பராய்மரம்.

**தலபுராணம் :**

திருப்பராய்த்துறையே முற்காலத்தில் தாருகாவனம் எனப் பெற்றது. இங்குத் தவம்புரிந்த முனிவர்கள் அவரவர் செய்யும் கர்மமே மோக்ஷம் தரும் என்றும் கடவுள் ஒருவர் வேண்டா என்றும் கூறி அறியாமையால் அகந்தையுற்றனர். இவ்வாறு இறைவனை இகழ்ந்தும் மறந்தும் வாழ்ந்த அம்முனிவர்களின் அஞ்ஞானத்தை அகற்ற சிவபெருமான் பிக்ஷாடன வடிவங்கொண்டு தாருகாவனம் சென்றார். முனிபத்தினியர் இறைவனது திருமேனி அழகில் ஈடுபட்டனர். தங்களது நாணத்தையும், கற்பையும் இழந்தனர். முனிவர்கள் சிவபெருமானை அழிக்க வேள்வி ஒன்று செய்தனர். வேள்விக் குண்டத்திலிருந்து யானை, புலி, திரிசூலம், மான், பாம்புகள், பூத கணங்கள் முதலியன தோன்றின. இறைவன்முன் அவைவலி யழிந்தன. முயலகனை இறைவன் தம்காலின்கீழ் ஏற்றருளினர். திருமால் மோகினியாகத் தாருகாவனம் சென்றார். முனிவர்கள் மயங்கி அவரைப் பின்தொடர்ந்தனர். திருமால் இறைவன்பால் முனிவர்களை அழைத்து வந்தார். முனிவர்கள் அறியாமை அகன்று சிவஞானம் எய்தி

இறைவனை வணங்கினர். பெருமான் தாருகாவன முனிவர்கட்கு வரங்கள் பலவும் நல்கினர். இந்திரன், குபேரன், சப்தரிஷிகள் முதலியோர் பூசித்து வரங்கள் பலவும் பெற்றுள்ளனர்.

**கல்வெட்டுச் செய்தி :**

மதுரைகொண்ட கோப்பரகேசரி வர்மரான முதற்பராந்தகன் காலத்திய கல்வெட்டுக்கள் மிகுதியாக உள்ளன. இன்னுரது என்று அறியமுடியாத இராஜகேசரிவர்மன் காலத்திய கல்வெட்டுக்களும் சில உள்ளன. அவையன்றிச் சுந்தரபாண்டியதேவர், கோநேரின்மை கொண்டான், கிருஷ்ணதேவ மகாராயர் கல்வெட்டுக்களும் இன்னு ரென்று அறியமுடியாத சில கல்வெட்டுக்களும் உள்ளன. எல்லாமாக அரசியலார்படியெடுத்த கல்வெட்டுக்கள் எண்பத்துமூன்று. அவற்ருல் அறியப்படும் கோயிலைப்பற்றிய உண்மைகள் கோயிலுக்கு விளக்கு எரிக்க ஆடும், பொன்னும், நிலமும் அளித்த செய்திகளாகும்.

சுந்தரபாண்டியதேவன் தன்னுடைய ஆட்சி 9-ஆம் ஆண்டில் தங்க ஆபரணங்கள் அளித்தான். குலோத்துங்கன் கருப்பக்கிருகத் துக்குப் பொன்வேய்ந்தான். சோமாஸ்கந்தர்கோயில் முன்மண்டபம் சிறைமீட்டான் திரிவிக்கிரம உதயனுல் கட்டப்பெற்றது. தலவிநாயக ருக்கு ஏகாம்பரஉதயன் ஆட்சியில் நிலம் வழங்கப்பெற்றது. இறைவன் திருப்பராய்த்துறை மகாதேவர், பராய்த்துறை பரமேசுவரன் என்று வழங்கப்பெறுகிருர். இத்தலம் உத்தமசீலிச் சதுர்வேதி மங்கலத்துத் திருப்பராய்த்துறை என்று குறிக்கப்படுகிறது. இங்கே தக்ஷிணயன புண்ணியகாலத்தும் சங்கராந்தியிலும் நீராட்டுவிழா நடைபெற்றதாகத் தெரிகின்றது.

## திருக்கற்குடி

திருச்சிராப்பள்ளி நகரின் மேற்கு எல்லையில் விளங்கும் இத்தலம் உய்யக்கொண்டான்மலை என்ற பெயரோடு திகழ்கிறது. ஐம்பது அடி உயரமுள்ள பாறையில் கோயில் விளங்குகிறது.

இறைவன் மலையில் குடிகொண்டிலங்குவதால் கற்குடி எனவும், உயிர்களையெல்லாம் உய்யக்கொள்வதற்கு உஜ்ஜீவனநாதர் என்ற திருப்பெயரோடு எழுந்தருளியிருத்தலால் உய்யக்கொண்டான் எனவும் வழங்கப்படுகின்றன. கல்வெட்டுக்களில் நந்திவர்ம பல்லவன்காலத் தில் நந்திவர்ம மங்கலம் என்றும் இராஜராஜசோழன் காலத்தில் இராஜராஜேஸ்வர சதுர்வேதிமங்கலம் என்றும் இவ்வூர் வழங்கப் பெற்றது. இத்தலத்திற்கு மேற்கே 5 கிலோ மீட்டர் தூரத்தில் ஆதி வயலூர் உள்ளது.

**தலப்பெருமை :**

நாற்புறமும் சோலைகளால் சூழப்பெற்று விளங்குகிறது இத்தலம். ஊரின் நடுவே 50 அடி உயரமுள்ள பெரிய பாறை ஒன்றில் கோயில் உள்ளது. மூவர் தேவாரத் திருப்பதிகங்களையும் பெற்றது இத்திருக்கோயில். இத்தலத்தில் வசிப்போர் நீண்ட ஆயுளையும், நிறைந்த செல்வங்களையும் பெறுவர் எனத் தல புராணம் கூறுகின்றது. மார்க்கண்டேயர்க்கு அருள்புரிந்த தலம். இத்திருத்தலத்தை வழிபடுவோருக்கு எமபயமில்லை.

**திருக்கோயில் அமைப்பு :**

திருக்கோயில் ஊரின் நடுவே மலையில் அமைந்துள்ளது. கீழேயிருந்து மேல்வரை படிக்கட்டுகள் உள்ளன. கீழே மலையடிவாரத்தில் தீர்த்தம் உள்ளது. மலையடிவாரத்தில் திருக்குளத்தின் அருகில் ஆறுமுகப்பெருமான் எழுந்தருளிவிளங்கும் பெரியமண்டபம் உள்ளது. விநாயகரைத்தரிசித்து படிகளைக்கடந்து மேலேசென்றால் மூன்றுநிலைக் கோபுரம் தோற்றமளிக்கிறது. அதன் உள்ளே சென்றால் கோயிலை வலம்வரும் வெளிப்பிராகாரமும் உள்ளது. அதை வலம்வந்து மேலே சென்றால் நடராஜர் மண்டபத்தை அடையலாம். கோயிலுக்கு மூன்று வாயில்கள் உள்ளன. இரண்டு தெற்குநோக்கியும் ஒன்று கிழக்குநோக்கியும் உள்ளன. சுவாமி அம்பாள் சந்நிதி மேற்குநோக்கியவை இரண்டு அம்மன் சந்நிதிகள் உள்ளன. ஒன்று கிழக்குநோக்கியுள்ளது. பிரதான அம்பாள் சந்நிதி மேற்கு நோக்கி உள்ளது. சுவாமி அம்பாள் கோயில்களுக்குத் தனித்தனியே பிராகாரங்கள் உள்ளன. திருக்கோயில்களின் கொடுங்கைகள் மிக்க அழகுடையன.

வலம்வந்து சுவாமி சந்நிதியை அடைந்து வழிபடலாம். சுவாமி சுயம்புமூர்த்தி. திருஞானசம்பந்தர் கற்குடிமாமலையாரின் பல்வேறு சிறப்புக்களைப் பாடியபதிகமும், திருநாவுக்கரசர் கற்குடியிறைவரின் காட்சி இன்பத்தில் ஈடுபட்டுப்பாடிய பதிகமும், சுந்தரர் அபயம் வேண்டிப் பாடிய பதிகமும் நம் சிந்தனைக்குவரும். அடுத்து இரண்டு அம்பாள் சந்நிதிகளையும் அடைந்து வழிபட்டு அருள் நலம் பெறலாம்.

**மூர்த்திகள் :**

சுவாமி பெயர் உஜ்ஜீவனநாதர். உய்யக்கொண்டார் (மலை) உச்சிநாதர், முத்தீசர், கற்பகநாதர் முதலிய திருநாமங்களும் உள்ளன. அம்பாள் பெயர் அஞ்சனாட்சி. பழைய அம்பாள் சந்நிதி மேற்கு நோக்கியுள்ளது. தீர்த்தங்கள் - பொன்னொளிர் ஓடை, குடமுருட்டி ஞானவாவி, எண்கோணக்கிணறு, நாற்கோணக்கிணறு ஆகிய ஐந்து தீர்த்தங்கள் உள்ளன. தலமரம் - வில்வம்.

**வழிபட்டோர் :**

உபமன்யு முனிவர், மார்க்கண்டேயர், கரன் ஈழநாட்டரசன், அருணகிரிநாதர் முதலியோர்.

**புராண வரலாறுகள் :**

மார்க்கண்டேயர்க்கு இறைவனளித்த வயது பதினறு. இதனைத் தந்தையார்கூற அறிந்த மார்க்கண்டேயர் பல தலங்களுக்கும் சென்று சிவபெருமானை வழிபட்டார். திருக்கற்குடியை அடைந்து வழிபடும் போது வயது பதினறுநிறைவுற்றது. மார்க்கண்டேயர்க்குச் சிரஞ்சீவித் தன்மை வழங்கியருளுமாறு அம்பிகை இறைவனிடம் பிரார்த்தித்தாள். இறைவனும் அவ்வாறே அருளினர்.

முனிவர்களுக்குத் தென்முகம் நோக்கியிருந்து விழுமிய நூல்களை உபதேசித்தருளினர்; இராவணனுடைய சகோதரர்களில் ஒருவன் கரன். கரன் இத்தலத்திறைவனை வழிபட்டு அருள்பெற்றவன். ஈழ நாட்டரசன் ஒருவனும் வழிபட்டு நலம் பெற்றுள்ளான்.

**நூல்கள் :-** மூவர் பாடியருளிய தேவாரத் திருப்பதிகங்களும், அருணகிரிநாதரின் திருப்புகழும், மீனட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள் பாடிய கற்குடிமாமலை மாலையும் உள்ளன.

**கல்வெட்டுக்கள் :**

இத்தலம் இராஜராஜன்காலத்து, பாண்டிய குலாசனி வளநாட்டு இராஜாஸ்ரய சதுர்வேதிமங்கலத்துக் கற்குடி எனவும் குலோத்துங்கன் காலத்து, இராஜமகேந்திர வளநாட்டு உறையூர்க் கூற்றத்துப் பிரம தேயமான ஷை சதுர்வேதிமங்கலத்துக் கற்குடி எனவும் முதல் இராஜேந்திரன் காலத்து கேரளாந்தக வளநாட்டு உறையூர்க் கூற்றத்துக் கற்குடியென்வும் மல்லிகார்ச்சுன மகாராஜா காலத்து இராஜகம்பீரவளநாட்டுப் பிரமதேயமான உய்யக்கொண்டான் திரு மலையெனவும் வழங்கப்பெறுகின்றது.

தருமம் ஆற்றிய மன்னர்கள் முதற்பராந்தகன், கண்டராதித்தன் மனைவி, பராந்தகன் மாதேவ அடிகளாராகிய செம்பியன்மாதேவியார், உத்தமசோழன், இராஜராஜன் 1, பரகேசரி இராஜேந்திரன் 1, வீர இராஜேந்திரன், குலோத்துங்கன் 1, மல்லிகார்ச்சுன மகாராஜா, மயிலைத் திண்ணன் முதலியோர். இவர்கள் அளித்தன, பெரும்பாலும் விளக்கிற்காகப் பொன்னும் ஆடும், நிவேதனத்திற்கு நிலமும் ஆம்.

# மெய்கண்ட நூல்கள்

(ஆராய்ச்சி முன்னுரை)

தருமையாதீனத் தமிழ்ப்புலவர்.
திரு. கு. சுந்தரமூர்த்தி எம். ஏ.,

(மலர் 37, இதழ் 3, பக்கம் 142 இன் தொடர்ச்சி)

## i சிவஞானசித்தியார் - பரபக்கம் :-

பரபக்கம் - பிறருடைய கொள்கை. இப்பகுதியுள் 14 சமயவாதிகளின் கொள்கைகள் எடுத்துக்கூறப்பெற்று மறுக்கப்பெறுகின்றன. ஆதலின் இப்பகுதி இப்பெயர்பெற்றது. அச்சமயவாதிகள் உலகாயதர், சௌத்திராந்திகர், யோகசாரர், மாத்யமிகர், வைபாடிகர், நிகண்டவாதி, ஆசிவகர், பட்டாச்சாரியர், பிரபாகரர், சத்தப் பிரமவாதி, மாயாவாதி, பாற்கரியன், நிரீச்சுரசாங்கியர், பாஞ்சராத்திரியர் என்போராவர். இவர்களுள் முன்னையை எழுவரும் புறப்புறச்சமயத்தவராவர். சமணருள் நிகண்டவாதி ஆசிவகர் என இருவகையினர் உண்டு. அவ்விருவர் கொள்கையும் தனித்தனியே எடுத்து இங்கு மறுக்கப்பட்டுள்ளன. அடுத்துக் கூறப்பெறும் எழுவரும் புறச் சமயத்தவர்களாவர். இவர்களுள் பட்டன், பிரபாகரன் ஆகிய இருவரும் மீமாம்சை மதத்தைத் தழுவியோராவர். நிரீச்சுரசாங்கியமதம் என்பது சாங்கிய மதத்தைத் தழுவியதாகும். இவர்களின் கொள்கைகள் விரிவாகக் கூறப்பெற்று மறுக்கப்பெற்றுள்ளன. பாஞ்சராத்திரியின் மதத்தின் கொள்கையும் மறுப்பும் ஏனையவைபோலத் தர்க்கரீதியாக இன்று புராணக் கதைகளைக்கூறி மறுப்பதாக உள்ளது. இப்பகுதி 301 பாடல்களையுடையது.

## ii சங்கற்ப நிராகரணம் :-

சங்கற்பம் - கொள்கை; நிராகரணம் - மறுப்பு. பிறரது கொள்கைகளைக்கூறி மறுத்தலின் இப்பெயர் பெறுவதாயிற்று. இதனுள் ஒன்பது கொள்கைகள் எடுத்துக்கூறி மறுக்கப்பட்டுள்ளன. இச்சமயத்தவர் மாயாவாதி, ஐக்கியவாதி, பாடாணவாதி, பேதவாதி, சிவசமவாதி, சிவசங்கிராந்தவாதி, ஈசுவரவவிகாரவாதி, சைவவாதி, நிமித்தகாரணபரிணாமவாதி என்போர். இவர்களுள் இரண்டாமவர்

முதல் ஏழாமவர்வரை உள்ளவர்கள் அகச்சமயத்தவராவர், முதற்கண்ணுள்ள மாயாவாதி புறச்சமயத்தவராவர். இறுதிக்கண் உள்ள இருவரும் சைவசித்தாந்தத்தினின்றும் ஒவ்வொரு கூற்றில் வேறுபாடு உடையவர்.

**பொது நிலை :-**

இருநூல்களிலும் மாயாவாதிகளின் கொள்கையும் மறுப்பும் இடம் பெற்றுள்ளன. சமயகுரவர்கள் தம் காலத்தில் சமண பௌத்தங்கட்கு ஈடுகொடுக்க நேர்ந்தமைபோல, இவர்கள் தம் காலத்தில் பொதுவாகப் பிற சமயங்கட்கும், சிறப்பாக இம்மாயாவாதக் கொள்கைக்கும் ஈடுகொடுக்க நேர்ந்தமை இதனால் புலனாகின்றது.

**சங்கற்பநிராகரணத்தின் சிறப்பு :-**

ஆசிரியர் காலத்தைத் தெரிதற்கு இந்நூல் உறுதுணையாகின்றது. 'சொல்லுதல் எளிது, அரிது அத்தொழிற்புரிவு எனப் புல்லிய பழமொழி புதுக்கினையன்றே' எனவரும் அடிகள் 'சொல்லுதல் யார்க்கும் எளிய' என்னும் திருக்குறளின் கருத்தை முகந்து நிற்பதாகும். சுந்தரர் முதலையுண்ட பாலனை அழைத்த வரலாறும், கயிலைபாதி காளத்திபாதி, திருவாசகம், ஞானசம்பந்தர் நாவுக்கரசரின் தேவாரம், காரைக்கால் அம்மையார் அற்புதத்திருவந்தாதி, கருவூர்த்தேவர் திருவிசைப்பா ஆகிய நூல்களின் கருத்துக்களும் நூலில் ஆங்காங்கு எடுத்தாளப்பெற்றுள்ளன. 'கரணம் தப்பினால் மரணம்', 'ஆழ அமுக்கி முகக்கினும் ஆழ்கடல் நீர் நாழிமுகவாது நாநாழி' எனவரும் பழமொழிகளும் இந்நூற்கண் இடம்பெற்றுள்ளன,

**4. தனி வகையில் அமைவன :-**

**i திருவருட்பயன் :-**

மெய்கண்ட நூல்கள் பதினான்கனுள்ளும் குறள் வெண்பாவால் ஆயது இது ஒன்றே. அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கின் திறந்தெரிதற்குத் திருக்குறள் எத்துணைத் தெளிவும் நுண்மையும் சிறப்பும் உடையதாய்த் திகழ்கின்றதோ அதைப்போன்றே சைவ சித்தாந்த நுண்பொருளைத் தெளிதற்கும் இந்நூல் பெரிதும் பயன்படுகின்றது. மெய்ந்நூற்பொருள்களைத் தெரிதற்கு விரும்புவார் முதற்கண் இந்நூலைப் பயில்வர்.

நூறு குறள் வெண்பாக்களாலாய இந்நூல் பத்து அதிகாரங்களையுடையது. அதிகாரம் ஒவ்வொன்றும் பத்துப் பத்துக் குறள் வெண்பாக்களை யுடையது. பதிமுதுநிலை, உயிரவைநிலை, இருள்மலநிலை, அருளதுநிலை, அருளுருநிலை, அறியுநெறி, உயிரவைவிளக்கம், இன்புறுநிலை, ஐந்தெழுந்தருள்நிலை, அணைந்தோர் தன்மை என்பன

அவ்வதிகாரத் தலைப்புக்களாகும். இதன் ஆசிரியர் இப்பகுப்பிலேயே மூவர் தேவாரங்களை வகுத்துக்கொண்டு, 'தேவார அருள் முறைத் திரட்டு' என்ற நூலையும் திரட்டியருளியுள்ளார். திருமுறைகளை இவ்வாறு எண்ணி மகிழலாம் என்பது ஆசிரியர் திருவுள்ளமாகும். ஆசிரியர் தாம் கூறும் மெய்ந்நூற்பொருளை உணர்வதற்கு எடுத்தாளும் உவமைகள் மிக நுண்ணியன. 'அணுகு துணையறியா ஆற்றேனில்', 'பாலாழி மீனுறும் பான்மைத்து', 'தாடலைபோல்', 'உற்கை தரும் பொற்கை உடையவர்போல்', 'தூணிழல் ஆர்தற்கு ஆரும் சொல்லார் தொகும் இதுபோல்' என்பன காண்க. ஆசிரியர் பிறிது மொழிதல் என்னும் அணிநலம்பட பல பாடல்களை அருளியுள்ளார். அவை மிகச் சுவையுடையன. 'இருவர் மடந்தையர்க்கு என்பயன்? இன்புண்டாம் ஒருவன் ஒருத்தி உறின்' 'தித்திக்கும் பால்தானும் கைக்கும் திருந்திடும் நாப்பித்தத்தில் தான் தவிர்ந்தபின்', 'தரையை அறியாது தாமே திரிவோர் புரையை அறியா புவி' என்பன காண்க.

'பொறியின்றி ஒன்றும் புணராத புந்திக்கு அறிவென்ற பேர்நன்று அற' என உயிரது இயல்பையும், 'பலரைப் புணர்ந்தும் இருட் பாவைக்கு உண்டு என்றும் கணவர்க்கும் தோன்றாத கற்பு' என ஆணவத்தின் இயல்பையும் ஆசிரியர் கூறியிருப்பது நகைச்சுவை ததும்ப வுள்ளன. வெள்ளியம்பல வாணமுனிவர் தாம் எழுதிய முதுமொழிமேல் வைப்பு என்னும் நூலில் வீட்டின்பாலுக்கு இந்நூலில் உள்ள குறள் வெண்பாக்களையே எடுத்தாண்டிருப்பதும் ஈண்டு குறித்தற்குரியதாகும்.

### ii நெஞ்சு விடு தூது :

இது கலிவெண்பாவால் அமைந்தது. இறுதியில் ஒரு தனி வெண்பாவும் உள்ளது. 125 கண்ணிகளையுடையது. தம்ஆசிரியரைத் தலைவராகவும் தம்மைக் காதலியாகவும் கொண்டு அவரிடம் சென்று அவரருளைப்பெற்று அதற்கு அடையாளமாக அவரிடம் உள்ள மாலையை வாங்கி வருமாறு தம் நெஞ்சைத் தூதாக விடுப்பதே இதன் பொருள் அமைப்பாகும். தமக்குரிய தலைவன் இறைவனே ஆவன் எனக்கூறி அவனது பெருமையையும், சிற்றறிவுடைய உயிரின் சிறுமையையும் அதற்குக்காரணமாய பாசங்களின் இயல்பையும் முற்பகுதியில் நெஞ்சிற்கு அறிவுறுத்துகின்றார். இடைப்பகுதியில், தான் அடையத்தக்க தலைவனின் பெருமை கூறுமுகமாகத் தசாங்கங்களின் இயல்பைக் கூறுகின்றார். இறுதிப்பகுதியில் அத்தலைவனை அடையுங்கால் இடையில் உலோகாயதன், மாயாவாதி, புத்தன், சமணன், சுமார்த்தன் முதலிய தீயோரிடத்துச் செல்லாது தம் தலைவனிடத்திலேயே சென்று கொன்றை மாலையை வாங்கிவர வேண்டுமெனக் கூறுகின்றார்.

" முன்னம்
தலைப்பட்டார் தீரத் துறந்தார் மயங்கி
வலைப்பட்டார் மற்றைய வரென்று — நிலத்தமிழின்
தெய்வப்புலமைத் திருவள்ளுவர் உரைத்த
மெய்வைத்த சொல்லை விரும்பாமல் "

எனவரும் வரிகள் திருக்குறளின்பால் இவர்வைத்துள்ள பற்றையும், வையத்துள் வாழ்வாங்கு வாழ்தற்கு இதனினூஉங்கு அரியதொரு நூலில்லை என்பதையும் விளக்குவதாகும்.

" தேற்றமற்ற சிந்தை சிவஞான மோனத்தால்
ஓட்டற்று வீற்றிருக்கும் ஊருடையான் "

என்ற பகுதி திருவுந்தியாரின் பாடலை நினைவுகூரச்செய்கின்றது.

" இருபொழுதும்
நாள் இருபத்தேழும் நவக்கிரகமும் நலியும்
கோள் இது வென்றெண்ணிக் குறிப்பதோ "

என்ற கண்ணிகள் அடியவரை நாளும் கோளும் நலியாவென உரை செய்த குறிப்பாகும். இறுதியில் உள்ள வெண்பா, நூற்பொருளின் பிழிவாக அமைந்து விளங்குகின்றது. ( தொடரும் )

---

## பார்வையாளர் குறிப்பு

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்

### சீகாழி ஸ்ரீ சட்டைநாதசுவாமி தேவஸ்தானம்

திருக்குடந்தைச் சிவனடியார் திருக்கூட்டத்து அன்பர்கள் அவர்களது 81-வது ஆண்டு 10-வது ஆதிவார வழிபாட்டை இன்று சீகாழி ஸ்ரீ சட்டைநாதசுவாமி திருக்கோயிலில் திருவருட் துணையுடன் மிகச் சிறப்பாக ஆற்றும் புண்ணியத்தைப்பெற்றுர்கள். திருக்கோயில் மிகத் தூய்மையாக இருந்ததும் மூர்த்தங்கள் எல்லாம் மிகவும் நன்கு அலங்கரிக்கப்பெற்று விளங்கிய சிறப்பும் மிகவும் பாராட்டுக்குரியது. ஆலயக் கண்காணிப்பாளர் அவர்களும் மற்றவர்களும் வழிபாட்டுக்குத் துணையாக எல்லா ஏற்பாடுகளையும் செய்துகொடுத்தார்கள். தருமையாதீனத் திருக்கோயில்களை எல்லாம் எப்பொழுதும் சிறந்தமுறையில் விளங்கும் நிலையில் அருளாட்சி செய்யும் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களது திருவடிகளுக்கு எங்களது வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம். தனியூர் சிவனடியார் திருக்கூட்டத்தார்களும் வழிபாட்டில் கலந்துகொண்டு சிறப்பித்தார்கள்.

(S-d ) S. சம்பந்தம், (S-d. P. D. S. சிங்காரம்,
12—3—78 தலைவர்.

# சிறு கீரை

திரு. மு. விட்டல் எம்.எஸ்ஸி., (வேளாண்மை)

இது முளைக்கீரை இனத்தைச் சேர்ந்த கீரையாகும். நன்கு வளமுள்ள நிலத்தில் வளரவிடின் ஒரு அடிஉயரம்வரை வளரும். சிறு கீரை சாகுபடி செய்ய கோடைக்காலமே சிறந்ததாயினும் ஆண்டு முழுவதும் பயிரிடலாம்.

**இதில் அடங்கியுள்ள சத்துக்கள் :**

| | | | |
|---|---|---|---|
| ஈரம் | ... | 90·00 | கிராம் |
| புரதம் | ... | 2·80 | ,, |
| கொழுப்பு | ... | 0·30 | ,, |
| தாதுப்பொருள்கள் | ... | 2·10 | ,, |
| இதரமாவுப்பொருள்கள் | ... | 4·80 | ,, |
| சுண்ணும்பு | ... | 251·0 | மி. கிராம் |
| பாஸ்பரஸ் | ... | 55·0 | ,, |
| இரும்பு | ... | 77·3 | ,, |

சிறு கீரையை மற்றக்கீரைகளோடு ஒப்புநோக்கில் இரும்புச்சத்து அதிகமாக உள்ளது.

**மருந்துக் குணம் :**

இதை உணவோடு உண்டால் சிறுநீர் அதிகமாகப் போகும், உடலின் நீர்கோவையை நீக்கும். உடல்வெப்பம்தணியும். காசநோய் உள்ளவர்கள் தினசரி உணவுடன் உட்கொள்ளல் நன்று. மருந்து உண்ணும் நாட்களில் சிறு கீரையைச் சேர்த்துக்கொள்ளக்கூடாது. ஏனெனில் இது பொதுவாக எல்லாவித மருந்துகளின் வீரியத்தையும் முறித்துவிடும்.

**சாகுபடி முறை :**

பருவம்: ஆண்டு முழுவதும் பயிரிடலாமாயினும் கோடையே சிறந்தது.

**நிலம் தயாரித்தலும் உரமிடலும் :**

நிலத்தை நான்கைந்து முறை உழுது நன்ருகப் புழுதியாக்க வேண்டும். இரண்டு (அ) மூன்று முறை உழுகையிலே எக்டருக்கு 25 டன் மக்கிய தொழு உரம் (அ) கம்போஸ்ட் இட்டு உழுதல் வேண்டும். பிறகு கடைசி உழவுக்குமுன் எக்டருக்கு 125 டன் அமோனியம் சல்பேட், 300 கிலோ சூப்பர் பாஸ்பேட், 60 கிலோ முரியேட் அப் பொட்டாஷ் இட்டு உழுநிலத்தை 4 அடி அகலமுள்ள பாத்திகளாகப் பிரித்தல் வேண்டும். நீளம் நிலத்திற்கு ஏற்பவும் நீர் பாயும் தன்மைக்கேற்பவும் பாத்திகளின் நீளம் மாறுபடுமாயினும் 6 அடி நீளம் சாலச் சிறந்ததாகும். (6×4)

**விதையும் விதைத்தலும் :**

ஒரு எக்டருக்கு 3 முதல் 3·5 கிலோ விதை தேவைப்படும். பொதுவாக விதை மிகச்சிறிதாகையால் சுமார் 5 பங்கு சிறுமணலுடன் கலந்து விதைத்தல்வேண்டும். விதைத்த மூன்ரும் நாள் விதைகள் முளைக்கத் துவங்கும்.

**பின் சேர்த்தியும் நீர்பாச்சலும் :**

களைகளை வளர ஒட்டாமல் களை எடுத்தல் வேண்டும். விதைத் ததும் ஒருமுறை நீர்பாய்ச்சி பிறகு மூன்ரும்நாள் உயிர் நீர் இறைத்தல்வேண்டும். நிலத்திற்கேற்ப ஒருவாரத்திற்கு ஒருமுறையோ ஐந்துநாட்களுக்கு ஒரு முறையோ நீர் பாய்ச்சவேண்டும்.

தற்போது நகர்புறத்தே உள்ள கீரைத் தோட்டங்கட்குப் பொது வாக நகரகழிவுநீரே பாய்ச்சப்படுகிறது. கழிவுநீர் பாய்ச்சப்படுவதால் அவர்கள் உரமிடுவதே இல்லை.

**அறுவடை :**

விதைத்த 20 முதல் 25 நாட்களுக்குள் கீரை அறுவடைக்குத் தயாராகிவிடும். பொதுவாக 25 நாட்களில் 15-20 செ. மீ. உயரம் வளர்ந்திருக்கும். பூமியில் இருந்து 4 முதல் 5 செ. மீ. விட்டு அறுத்து கத்தைகத்தையாகக் கட்டி விற்பனைக்கு அனுப்புவர். அறுத்தபிதகு 2 மாதம் நிலத்தை விட்டுவைத்தபின் செடி காய்பிடித்து விதைக்குத் தயாராகும்ஒருசில இடங்களில் மறுமுறை 15 முதல் 20 நாட்களுக்குள் சிறுகீரையை அறுக்கின்றனர். முதல் அறுப்புமுடிந்ததும் எக்டருக்கு 100 முதல் 125 கிலோ யூரியாவைத் தெளித்து நீர்பாய்ச்சினல் கீரை நன்கு வளரும்.

**மகசூல் :**

ஒரு எக்டரில் கை கத்தையாக சுமார் 10.00,000 கிடைக்கும். சராசரி ஒரு கத்தை விலை விவசாயிக்குக் கிடைப்பது ஒரு பைசாவில் இருந்து இரண்டு பைசாவரை கிடைக்கும்.

**பாதுகாப்பு :**

விதை விதைத்ததும் விதைகளை எறும்பு முதலியவைகளினின்று காக்க பி. எச். சி. 10% மருந்தைத் தூவுக. பொதுவாக இதில் புள்ளி நோய் வராது. வந்தால் தடுக்க மைதேன் இஸட் - 78 மருந்தை 0.15% கலவையாகத் தெளிக்கவேண்டும். (ஒரு கிலோ மருந்து 500 லிட்டர் நீரில் கலந்து தெளித்தல்.)

---

# அன்னை அருள்மாலை

திருமுறை இன்னிசைவாணர்

**வேலூர், திரு. க. சொக்கலிங்க ஓதுவார்.**

ஆதிபதியாகும்வட குரங்காடுதுறைமேவும்
அழகுசடை முடியம்மையே
அண்டர்தொழு திருப்பழனப் பெரியநாயகிதிருவை
யாறுஅறம் வளர்த்தஅம்மை
சோதிதிரு நெய்த்தானத் தலத்திற் பாலாம்பிகை
தூயதிருப் பெரும்புலியூர்ச்
சுகந்தரும் சௌந்தர நாயகிமழபாடித்
தோன்றும்அழகம் மை மேலோர்
ஓதியுணர் திருப்பழுவூர் அருந்தவ நாயகியம்மை
ஓங்குதிருக்கா னூரில்நாம்
உய்யஉறைகின்றசிவ யோகநாயகியம்மை
உயர்அன்பி லாலந்துறை
பாதியாய்ப் பரமனோ டுறைசௌந்தர அம்மை
பண்ணிலுறு பெண்ணமுதமே
பஞ்சின் மெல்லடியிணையைத் தஞ்சம் அடைந்தென்றும்
பணிவேற்கருள் அன்னையே. (6)

உ

# ஆயில்யத்திருநாள் ஆலய வழிபாடு

"கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்பதும், "ஆலயம்தொழுவது சாலவும் நன்று" என்பதும் நம்நாட்டில் வழங்கும் பழமொழிகள். மக்களைத் திருக்கோயில் வழிபாட்டில் ஈடுபடுத்தி, சைவ - சமயப் பெருமைகளை அறியச் செய்து உய்விக்க வேண்டும் என்ற பெருங்கருணையால் தருமை யாதீனம் 26-ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் தமது குருமூர்த்திகள் காட்டியருளிய வழியிலேயே தமது ஜன்ம நட்சத்திரமாகிய ஆயில்யத் திருநாட்களில் பாடல்பெற்ற திருத்தலங்கள்தோறும் வழிபாடு நிகழ்த்துவித்து முறையான வழிபாட்டிற்கு வழிகாட்டி வருகிறார்கள். காவிரி வடகரைத் தல வழிபாடு நிறைவுற்று காவிரித் தென்கரைத் தல வழிபாடு தொடங்கி நிகழ்கின்றது. உழவாரப்பணி, விசேட அபிடேக ஆராதனைகள், தலத் திருப்பதிகங்களை அச்சிட்டு ஓதி வழங்குதல், சமயப் பிரசாரம் முதலியன ஆயில்யத் திருநாள் வழிபாட்டின் அங்கங்களாகும்.

நிகழும் பிங்கள ஆண்டு பங்குனித்திங்கள் 8-ஆம் நாள் (21—3—78) செவ்வாய்க்கிழமையன்று மாத ஜன்ம நட்சத்திர மாதலின், நண்பகலில் திருப்பராய்த்துறை ஸ்ரீ பொன்மயிலம்மை உடனுகிய ஸ்ரீ பராய்த்துறைநாதர் திருக்கோயிலிலும், மாலையில் திருக்கற்குடி ஸ்ரீ அஞ்சனாட்சி உடனுகிய ஸ்ரீ உஜ்ஜீவநாதசுவாமி திருக்கோயிலிலும் அபிஷேக ஆராதனைகளும் வழிபாடும் நடைபெறும். திருக்கற்குடியில் சமயச் சொற்பொழிவுகள் மாலை 4-மணி முதல் நிகழும்.

**தலைவர் :-**

**திரு. மா. பெரியசாமி அவர்கள்**

செயலர், திருச்சிராப்பள்ளித் தமிழ்ச் சங்கம்.

**விரிவுரைகள் :-**

**புலவர். திரு. மு. வைத்தியநாதன் அவர்கள்**

திருச்சிராப்பள்ளி.

**"திருப்பதிகங்களின் சிறப்பு"**

தருமையாதீனத் தமிழ்ப்புலவர்,

**வித்துவான் திரு. வி. சா. குருசாமி தேசிகர் அவர்கள் M. A.,**

முதல்வர், தருமையாதீனப் பல்கலைக் கல்லூரி, தருமபுரம்.

**"ஆலய வழிபாடு"**

வழிபாட்டில் நால்வர் நற்றமிழ் மன்றத்தினர் கலந்துகொள்வார்கள். அனைவரும் வருக! வழிபட்டு உய்க! அரன் அருள் பெறுக!

**கடிதங்கள் :**

**[தருமை யாதீனம் இருபத்தாருவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முகதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் நெறி விளக்கம் என்றதலைப்பில் தாயுமானவர் நெறிபற்றி வழங்கிய ஆசியுரையை, திருச்சிராப்பள்ளி அகில இந்தியவானொலி நிலையத்தின் ஒலிபரப்பின்மூலம் 6. 7, 8, 9,10. 11—2—78 ஆகிய நாட்களில் கேட்டு மகிழ்ந்த அன்பர்களின் கருத்துரைக் கடிதங்கள்.]**

தா. குருசாமி, — மதுரை,
3, சொக்கப்ப நாயக்கர் தெரு, — 14—2—78.

வானொலியில் 9, 10, 11-2-78 தேதிகளில் மட்டும் தாயுமானார் நெறிவிளக்கம் கேட்டேன். 'தருக்கம்' என்பது உண்மை காண்டலின் நோக்கமே' என்ற விளக்கமும், ஆதிபரமாசாரிய மூர்த்திகளின் 'கற்க இடர்ப்பட்டு' என்ற திருப்பாட்டின் மேற்கோளும் மிக இனிது. 10உ வழங்கிய உரையில் தாயுமானவர் வரலாற்றில் திளைக்கவைத்து. வசதியை உதறிவிட்டுப் பெரியரான தொடர்பைத் தொட்டுக்காட்டி, தமையனாருக்கு சுவீகாரமாகச் சென்றது-தாயுமானவர்பெயர்க்காரணம் ஆகிய விளக்கங்கள் அற்புதம். தாயுமானவர் காலம் முத்துக் கிருஷ்ணப்பநாயக்கருடையது என்ற குறிப்பு வரலாற்று விருந்து!

11உ 'சைவ சமயமே சமயம்' என்ற திருப்பாட்டின் விளக்கம் பாடியமாக இருந்தது. அரசனாக உருவகப்படுத்தி, பரிவாரங்களையும் இன்னபிறவற்றையும் விளக்கம்செய்தது எம்மனோர் பொருட்டே என எண்ணுவர். 9உ இனிய இசையோடு நெறிவிளக்கம் அமைந்து, 10உ பிலத்தில் நுழையச்செய்து, 11உ அவ்விளக்கம் அரசுக்கட்டிலில் அமர்ந்துகொண்டது.

விளக்கம் அருளிய திருவடிகள் வாழி. நிலையமும் வான்புகழ் கொண்டது. எண்ணமும் செயலும் ஒன்றுபடுத்தி வழிகாட்டும் குருநாதனின் திருவார்த்தை கேட்ட செவிகள் பேறுபெற்றன என்று எண்ணி அடிமையை வியந்தேன். அவ்வார்த்தைகளின் வழி நிற்க குருவருள் பாலிக்கவேண்டும். வணங்குகின்றேன்.

* * * *

**S. RATNAM,** — **Hyderabad (27) A-**
**Supdt. Regional Passport Office,** — **19—2—78.**

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களின் "தாயுமானார்நெறி விளக்கம்" பற்றிய உரையைத் திருச்சி வானொலி நிலையத்தார் ஒலி பரப்பக் கேட்டுப் பயன்பெற்றேன். மிக்க மகிழ்ச்சியுற்றேன்.

குருமகாசந்நிதானம் அவர்கள் தாயுமானுர் வேதாந்த சித்தாந்த சமரசம் கண்ட முறையை விளக்கிய பாங்கும் "ஒன்ருக நல்லது கொல்லாமை" என்ற வள்ளுவரின் கூற்றின் வழி' கொல்லாமை பற்றித் தாயுமானுரின் கருத்துக்களை விளக்கிய பாங்கும் மிகவும் சிறப்பாக இருந்தன. என்போன்ருேர் கேட்டுப் பயனுறும் வகையில் குருமகாசந்நிதானம். அவர்களின் அருட்பணி தொடர்ந்து நடை பெற ஸ்ரீ செந்தமிழ்ச் சொக்கர் திருவருளைச் சிந்திக்கின்றேன்.

* * * *

வித்யாரத்ன, கலைமாமணி,
**சுத்தசத்வானந்தா,**
அமைப்பாளர் & தலைவர்:
அகிலஉலக அருட்பேரொளி மன்றம்.

5, சிங்காரி நாய்க்கன் தெரு,
மயிலாப்பூர், சென்னை 4,
12—2—1978.

திருச்சி வானெலி நிலயத்தில், "நெறிவிளக்கம்" என்ற தலைப்பில், வேதாந்த சித்தாந்த சமரச நன்னிலை பெற்ற வித்தகச் சித்தர் கணத்தை, மூலன் மரபில் வருமௌன ஞான குருவைப் போற்றிக் கண்ணுர நீர்மல்கிக் கசிந்துருகிப் பாடிய தாயுமானவரின் தவ, சிவ நெறிகளைக் குறித்துக் குருமகாசந்நிதானம் அவர்கள் இனிய எளிய தமிழில் எல்லாருக்கும் இனிது விளங்கும்வண்ணம் தொடர்ந்து விளக்கம் செய்ததைக் கேட்டு இன்புற்று உள்ளுணரும் பெரும் புண்ணியப் பேறுபெற்றேன்.

தாயுமானவர் வகுத்துக்கண்ட "சமரசம்" என்பதனைப்பற்றியும் தாயுமானவரின் ஆன்மிக நெறி "சைவமே" ஆகும் என்பதனைப் பற்றியும், தாயுமானவர் மிகத் தெளிவாகப் பாடிய "சைவ சமயமே சமயம்" என்ற பாடலைப்பற்றியும் வெகு அருமையாக, அற்புதமாக நல்லிசை மணிக்குரலிற் குருமகாசந்நிதானம் அவர்கள் விளக்கிய ஞானுனுபவப் பெருந்திறத்தைப் பன்முறை சிந்தித்துச் சிந்தித்து மகிழ்ந்த வண்ணம் இருக்கின்றேன்.

குருமகாசந்நிதானம் அவர்கள் நிகழ்த்திய நெறிவிளக்கத்தில் "அன்பர் பணி செய்யவெனை ஆளாக்கி விட்டுவிட்டால் இன்பநிலை தானே வந்தெய்தும் பராபரமே! "எவ்வுயிரும் தன்னுயிர்போல் எண்ணி யிரங்கவுநின் தெய்வ அருட்கருணை செய்யாய் பராபரமே!" என்ற தாயுமானவரின் பர்ாபரக் கண்ணியிலமைந்த பாடல்களும் இடம் பெற்றதைக் கேட்டு, ஆனந்தம் மிகவுற்றேன்.

தாயுமானவரைப்பற்றிய மிக அழகானதொரு வடிவம் தந்து, அவரது நெறிகளை அகில உலகும் அறியச் செய்து வரும் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கட்குச் சைவ உலகம் வணக்கம் செலுத்தி நன்றி நவிலப் பெரிதும் கடமைப்பட்டுள்ளது, வணக்கம்.

# செய்திகள்

## ஆயில்யத் திருநாள் ஆலய வழிபாடு

தருமையாதீனம் இருபத்தாருவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் மாத ஜன்ம நட்சத்திரவழிபாடு 21—2—78 செவ்வாய்க்கிழமையன்று நண்பகலில் திருவாட்போக்கி ஸ்ரீ சுரும்பார்குழலி உடனுகிய ஸ்ரீ இரத்தினகிரிநாதர் திருக்கோயிலிலும், 22—2—78 புதன்கிழமையன்று காலையில் திருக்கடம்பந்துறை ஸ்ரீ முற்றிலாமுலையம்மை உடனுகிய ஸ்ரீ கடம்பவன நாதர் திருக்கோயிலிலும் விசேஷ அபிஷேக ஆராதனைகள், அர்ச்சனைகள் முதலியவற்றுடன் சிறப்பாக நடைபெற்றது. வழிபாட்டின்போது தலப்பதிகங்கள் அடங்கிய நூல் வெளியீட்டு வழங்கப்பெற்றது. தலத் திருப்பதிகங்கள் ஓதுவாமூர்த்திகளால் பாராயணம் செய்யப்பெற்றன.

திருக்கடம்பந்துறையில் வழிபாட்டிற்குப்பின்னர் சமய விரிவுரைக் கூட்டம், திருக்கடம்பந்துறை திருவாசக அன்பர் திரு. வைத்தியலிங்க முதலியார் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. தருமையாதீனத் தமிழ்ப்புலவர், வித்துவான். திரு. வி. சா. குருசாமி தேசிகர் எம். ஏ., அவர்கள் திருப்பதிகப்பாடல்களின் கருத்துக்களை விளக்கி விரிவுரையாற்றினார்கள். அன்பர்கள் பலர் வழிபாட்டில் கலந்துகொண்டும் விரிவுரைகளைக் கேட்டும் பயன்பெற்றனர்.

## திருபுவனத்தில் குருபூஜை விழா

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான திருபுவனம், ஸ்ரீ கம்பகரேசுவரசுவாமி தேவஸ்தானம் சந்நிதி வீதியில் உள்ள தருமையாதீனம் 17வது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ மாணிக்கவாசக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் குருபூஜை விழா 26—2—78 ஞாயிற்றுக்கிழமை அன்று சிறப்பாக நடைபெற்றது. அன்று குருமூர்த்த ஆலயத்தில் காலை மாலை இருவேளைகளிலும் விசேஷ அபிஷேக ஆராதனைகளுடன் குருபூஜை விழா சிறப்பாக நடைபெற்றது. நண்பகல் மாகேசுவர பூஜையும், மாலை 6-30 மணியளவில் சமயச்சொற்பொழிவுகளும் நடைபெற்றன. தருமபுரம் வித்துவான். திரு. மு. ஆறுமுகதேசிகர் அவர்கள் 'பண்டாரசாத்திரங்கள்'

என்ற தலைப்பிலும் தருமையாதீனப் பல்கலைக்கல்லூரித் தமிழ்த் துணைப்பேராசிரியர் வித்துவான். திரு. மு. சிவச்சந்திரன் எம். ஏ. அவர்கள் 'குருலிங்கசங்கமவழிபாடுகள்' என்ற தலைப்பிலும் விரிவுரை யாற்றினார்கள். பலர் குருபூஜைவிழாவில் கலந்துகொண்டு வழிபட்டும் விரிவுரைகளைக் கேட்டும் பயன்பெற்றனர்,

## காஞ்சிபுரம் தொண்டைமண்டல ஆதீனத்தில்
# ஞானபீடாரோகணப் பட்டாபிஷேக விழா

தொண்டை நன்னாட்டில் காஞ்சிபுரத்தில் மிகப் பழமையான ஆதீனமாக விளங்கிவருவது ஸ்ரீ ஞானப்பிரகாச தேசிக சுவாமிகள் மடாலயமாகும். இத்திருமடம் திருக்கயிலாய பரம்பரை மெய்கண்ட சந்தானத்தின் நந்திமரபில் உள்ள ஆதீனத்திருமடங்களுள் ஒன்றாகத் திகழ்வது. தொண்டைமண்டல முதலியார் மரபினருக்கு ஆசாரிய பீடமாகத்திகழ்வது. இத்திருமடத்தில் 229 ஆவது பட்டத்தில் விளங்கிய ஸ்ரீ ஞானப்பிரகாச தேசிக சுவாமிகளுக்குப்பின் இத்திரு மடத்தின் நிர்வாகக் குழுவினர் பலரும் தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களைத்தரிசித்து, தங்கள் திருமடத்திற்குத் தக்கார் ஒருவரை ஆசாரியராக அனுப்பியருளவேண்டுமென்று விண்ணப்பித்துக்கொண்டனர். தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் பெரியபுராணப்பேருரை வரைந்த கோவை சிவக்கவிமணி, திரு. சி. கே. சுப்பிரமணிய முதலியார் அவர்கள் உறவினரும், கல்வி, அறிவு, ஒழுக்கம் முதலிய தகுதிகளுமுடைய திரு. ஞானசம்பந்தம் என்ற அன்பருக்கு, சென்னை. தருமையாதீனம் சமயப்பிரச்சார நிலையம் வித்துவான், தவத்திரு, மகாலிங்கத்தம்பிரான் சுவாமிகளைக்கொண்டு, காஞ்சிபுரம் தொண்டைமண்டல ஆதீனத் திலேயே, ஆதீன அன்பர்கள் முன்னிலையில் ஆசிரமமும் யாத்திரா காஷாயமும் வழங்கச்செய்து துறவுநிலையருளினார்கள். பின்னர், தருமையாதீனத்திற்கு வரப்பணித்து ஐந்துமாதகாலத்திற்குச் சமயத் துறையில் மேற்கொண்டு ஒழுகவேண்டிய நியமங்களை நேரடியாக அறிந்துகொள்ளத் திருவுளம்பற்றியருளினார்கள். காசியாத்திரை, திருச்செந்தூர் முதலிய தலயாத்திரைகளைச் செய்வித்து, தீட்சாக்கிரம மாக, சமய - விசேட - நிர்வாண தீட்சைகள் வழங்கியருளினார்கள். ஆறுகட்டிச்சுந்தரவேடம் வழங்கி திருக்கோயில் வழிபாட்டுமுறைகளை அறியவும் திருவிழா உற்சவாதிகளில் நேரடியாகப் பயிற்சி பெறவும் வாய்ப்புக்களை அருளினார்கள். பின்னர் காஞ்சிபுரம் திருமடத்தின் மகாசந்நிதானமாக அனுப்பியருளினார்கள்.

அன்பர்கள் பலரின் வேண்டுகோட்படி, தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் 12—2—78 ஞாயிற்றுக்கிழமை காலை

11 - மணியளவில் காஞ்சிபுரத்திற்கு எழுந்தருளினர்கள். ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களை திரு. V. K. இராமசாமி முதலியார், திரு. M. S. சாரங்கபாணி முதலியார், மாவட்ட ஆட்சித்தலைவர், இந்து சமய அறநிலையத்துறைத் துணை ஆணையர் முதலியோர் பூர்ணகும்பம் முதலிய மரியாதைகளோடு வணங்கி வரவேற்று திருமடத்திற்கு அழைத்துச்சென்றனர்

தருமைக்குருமணி அவர்கள் முன்னிலையில் காஞ்சிபுரம் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களின் ஞானபீடாரோகண விழா சிறப்புற நிகழ்ந்தது. இருகுருமணிகளும் காஞ்சிபுரம் குமரக்கோட்டத்திற்கு எழுந்தருளி வழிபாடாற்றினர்கள்.

மாலை 6 - மணி அளவில் தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் தலைமையில் வாழ்த்துரைக் கூட்டம் நிகழ்ந்தது. தருமைக் குருமணி அவர்களின் ஆசியுரைக்குப் பின்னர், திரு. V. K. இராமசாமி முதலியார், திரு. M. S. சாரங்கபாணி முதலியார், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர், திரு. பாலசுப்பிரமணியம், திரு. அ. ச. ஞானசம்பந்தம், திரு. இராமையா முதலியார் ஆகிய பலரும் உரையாற்றினர்கள். காஞ்சிபுரம் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் வாழ்த்துரை நிகழ்த்தினர்கள். பின்னர் இரண்டு மகா சந்நிதானங்களும் ஸ்ரீ ஏகாம்பரநாதர் திருக்கோயில் ஸ்ரீ காமாட்சியம்மை திருக்கோயில்களுக்கும் எழுந்தருளி வழிபாடாற்றி திரு மடத்தில் கொலு விற்றிருந்து அருட்காட்சி வழங்கியருளினர்கள். அன்பர்கள் பலர் தரிசித்து ஆசிபெற்றனர்.

### தருமையாதீனத்திற்கு, தமிழ்நாடு ஆளுநர்

## மேதகு பிரபுதாஸ் பட்வாரி அவர்களின் வருகை

தமிழ்நாடு ஆளுநர் மேதகு பிரபுதாஸ் பட்வாரி அவர்கள் 19—2—78 ஞாயிறு காலை 7—30 மணிக்குத் தருமையாதீனத்திரு மடத்திற்கு வருகைபுரிந்து ஸ்ரீ சொக்கநாதப் பெருமான் பூஜையைத் தரிசித்தார்கள்.

ஆதீனத்திருமடத்தின் நுழைவாயிலில் ஆளுநர் அவர்களுக்கு வரவேற்பு அளிக்கப்பட்டது. நூல்நிலையம் தெய்வத்தமிழ் மன்றம் முதலியவற்றைக் கண்டு களித்து ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களின் ஆன்மார்த்தபூஜாமூர்த்தியாக விளங்கும் ஸ்ரீ சொக்கநாதப் பெருமான் சந்நிதியில் சட்டை முதலியவற்றைக் களைந்து மன மௌனநிநின்று வழிபட்டார்கள். ஸ்ரீலஸ்ரீகுருமகாசந்நிதானம் அவர்கள் ஸ்ரீ சொக்கநாதப்பெருமானுக்குச்சார்த்திய இண்டைமாலையை ஆளுநர்

அவர்களுக்குச் சூட்டிப் பொன்னுடை அணிவித்துப் பிரசாதங்கள் வழங்கியருளினார்கள். நெற்றியில் திருநீறும் குங்குமமும் திகழப் பக்தி உணர்வோடு ஆளுநர் அவர்கள் சிற்றுண்டிக்குப்பின் ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்களைத் தரிசித்து அருளாசி பெற்றார்கள். தருமை ஆதீனஸ்தாபகர் ஸ்ரீ குருஞானசம்பந்தர் ஜீவசமாதி கூடிய திருக்கோயிலாகிய ஸ்ரீ ஞானபுரீசுவரர் திருக்கோயில், ஸ்ரீ அஷ்டாதசபுஜ மகாலக்ஷ்மி துர்க்காதேவி திருக்கோயில்களுக்கும் ஆளுநர் அவர்கள் சென்று தரிசனம் செய்தார்கள்.

## தருமபுரம் ஸ்ரீ ஞானம்பிகை அரசினர் மகளிர் கலைக்கல்லூரி

## பத்தாண்டு நிறைவு விழா

மாயூரத்தில் தருமபுரம் ஞானம்பிகையின் திருவருட் பெயரால் நடைபெற்றுவரும் அரசினர் மகளிர் கலைக்கல்லூரியின் பத்தாண்டு நிறைவு விழா 19—2—78 ஞாயிறு காலை தருமபுரம் ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் தலைமையில், தமிழ்நாடு ஆளுநர் மேதகு பிரபுதாஸ் பட்வாரி அவர்களின் சிறப்புரையோடு நன்கினிது நடைபெற்றது. இராஜன்தோட்டத்தின் கல்லூரி நுழைவாயில்கள் கோபுரம் போன்று கீற்று வேலைப்பாடுகளால் அழகுறுத்தப் பெற்றிருந்தன. வண்ணமின் விளக்குகளாலும் வரவேற்பு வளைவுகளாலும் கொடித் தோரணங்களாலும் கல்லூரிக் கட்டிடம் பொலிவோடு விளங்கிற்று.

காலை 9—30 மணிக்குத் தமிழக ஆளுநர் அவர்கள் கல்லூரிக்கு வருகைபுரிந்தார்கள். 9—45 மணியளவில் தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் கல்லூரிக்கு எழுந்தருளினார்கள். ஆளுநர் அவர்கள் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களுக்கு மாலை அணிவித்து வரவேற்றார்கள்.

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களையும் ஆளுநர் அவர்களையும் மேளவாத்தியங்களோடு கல்லூரி மாணவியர்கள் மலர்தூவி விழா மேடைக்கு அழைத்துச் சென்றனர். விழாப் பந்தல் சிறந்தமுறையில் அலங்கரிக்கப் பெற்றிருந்தது. விழாமேடையில் அமைக்கப்பெற்றிருந்த குத்துவிளக்குகளை ஆளுநர் அவர்களும் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களும் ஏற்றி வைத்து விழா நிகழ்ச்சிகளைத் தொடங்கி வைத்தார்கள்.

பத்தாண்டு நிறைவு விழாக்குழுவின் தலைவர் திரு. எம். சோணை முத்துக்கோன் வரவேற்புரை கூறினர். கல்லூரி முதல்வர் செல்வி. சி. பார்வதி அவர்கள் வரவேற்பு மடலை வாசித்து வழங்கினர். விழா நினைவு அன்பளிப்பாக ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களுக்கு நடராஜர் திருவுருவத்தட்டும், ஆளுநர் அவர்களுக்கு காந்தியடிகள்

உருவமும் வழங்கப்பெற்றன. ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் தலைமைப்பேருரையாக அருளாசி வழங்கி பத்தாண்டு நிறைவு விழா மலரை வெளியிட்டருளினார்கள். மேதகு ஆளுநர் அவர்கள் கலையரங்கத்தைத் திறந்துவைத்தும் நன்கொடையாளரைச் சிறப்பித்தும் பத்தாண்டு நிறைவு விழாப் பேருரையாற்றினார்கள். ஆங்கிலப் பேராசிரியை திருமதி. இந்திராசிவகாமி அவர்கள் நன்றி கூறினார்கள்.

கல்லூரி மாணவிகள் அனைவர்க்கும் அறுசுவை உண்டி அளிக்கப்பெற்றது.

20—2—78 திங்கட்கிழமை முத்தமிழ் விழா நடைபெற்றது. வழக்காடுமன்றம், பட்டிமண்டபம் ஆகிய சிறப்பு நிகழ்ச்சிகளோடு பத்தாண்டு விழா நிறைவுற்றது.

## தருமையாதீனப் புலவருக்குப் பொற்கிழி

தருமையாதீனப் புலவரும் சித்தாந்த வித்தகரும் ஆகிய திரு. க. வச்சிரவேல் முதலியார் B. A. L. T., அவர்களது பணியைப் பாராட்டும் வகையில் மதுரை வடக்கு ஆடி வீதியிலுள்ள திருவள்ளுவர் கழகத்தின்சார்பில் பாராட்டு விழாவும் பொற்கிழி அளிப்பு விழாவும் 16—1—78 அன்று மாலை மதுரை மாவட்டத் தலைமை நீதிபதி திரு அ. சோமசுந்தரம் B. Sc., B. L., அவர்கள் தலைமையில் சிறப்புற நிகழ்ந்தது. இறை வணக்கத்திற்குப்பிறகு, திருவள்ளுவர் கழகப் பொருளர் திரு. வெ. கைலாசம் அவர்கள் அனைவரையும் வரவேற்றார்கள். விழாத் தலைவர் அவர்கள் திரு. க. வச்சிரவேல்முதலியார் அவர்களது பணியைப் பாராட்டி அவருக்குப் பொன்னாடைப் போர்த்திச் சிறப்பித்தார்கள். திருவள்ளுவர் கழகத் தலைவர் திரு. மீ. கந்தசாமிப் புலவர் அவர்கள் தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்களது ஆசிச்செய்தியை வாசித்தளித்தார்கள். தொடர்ந்து வாழ்த்துச் செய்திகளும் வாழ்த்துப்பாக்களும் படிக்கப் பெற்றன. திருநெறிப்புலவர், சிவநெறிச்செம்மல் திரு. சி. ராம. நாகப்பச் செட்டியார் அவர்கள் நன்கொடை வழங்கியவர்கள் பெயர்களை வாசித்தபின்னர், திரு. முரு. பழ. இரத்தினம் செட்டியார் அவர்கள் (பாராட்டுச் செலவு நீக்கி) 10400—00 ரூபாய்கொண்ட பொற்கிழியைக் கூட்டத்தினரின் மகிழ்ச்சி ஆரவாரத்திற்கிடையே வழங்கித் தமது பாராட்டையும் தெரிவித்துக்கொண்டார்கள். இப் பொற்கிழித் தொகையில் தருமை யாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் வழங்கியருளிய ரூபாய் 1001-ம் சேர்ந்ததாகும். அறிஞர்கள் பலரின் சிறப்புரைக்குப்பின்னர் திரு. க. வச்சிரவேல் முதலியார் அவர்கள் தமது நன்றியைத் தெரிவித்துக்கொண்டு "மண்ணில்

நல்ல வண்ணம் வாழலாம்" என்னும் தேவாரப் பாடலுக்கு விளக்கம் கூறி, தம் குடும்பத்தின் மங்கல நிகழ்ச்சிகளுக்கு இப்பொற்கிழி பெரிதும் பயன்படும் என்று கூறி மிக்க மன நிறைவோடு ஏற்றுக் கொண்டார்கள். விழாவிற்குப் பின்னர் வந்த தொகை 109—11ம் உரியமுறையில் திரு முதலியார் அவர்களிடம் சேர்ப்பிக்கப்பெற்றது. கழகச் செயலர் புலவர் திரு. சண்முகவேலன் அவர்கள் நன்றியுரைக்குப் பின்னர் பாராட்டு விழாக் கூட்டம் சிறப்புற நிறைவுற்றது.

## திருக்குறுக்கையில் மாசிமக ஏகதின உற்சவம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான திருக்குறுக்கை ஸ்ரீ ஞானம்பிகை உடனுகிய ஸ்ரீ வீரட்டேசுவரசுவாமி தேவஸ்தானத்தில் மாசிமக ஏகதின உற்சவம் பிங்கள ஆண்டு மாசித் திங்கள் 10 ஆம் நாள் (22—2—78) புதன்கிழமை சிறப்பாக நடைபெற்றது. குறுக்கை அட்டவீரட்டத் தலங்களில் ஒன்று. இறைவன் மன்மதனை நெற்றிக்கண்ணால் எரித்தழித்த வீரம்புரிந்த சிறப்புமிக்க தலமாகும். இங்கு 21—2—78 செவ்வாய்க்கிழமையன்று அனுக்ஞை, விக்னேஸ்வரபூஜை, வாஸ்துசாந்தி முதலியனவும், 22—2—78 அன்று காலை ஸ்ரீ மன்மதசம்ஹாரமூர்த்திக்கும் பஞ்சமூர்த்திகளுக்கும் விசேஷ அபிஷேக ஆராதனைகளும் இரவு பஞ்சமூர்த்திகள் திருவீதியுலாக் காட்சியும் சிறப்பாக நடைபெற்றன. திருவீதியுலாக் காட்சியின் போது வாணவேடிக்கைகளும், திருமுறைப் பாராயணமும் நடைபெற்றன. அன்பர்கள் வழிபட்டுப் பயன்பெற்றனர்.

## திருக்குவளையில் நெல் மகோற்சவம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான திருக்குவளை ஸ்ரீ தியாகராஜசுவாமி தேவஸ்தானத்தில் நெல் மகோற்சவம் சிறப்பாக நடைபெற்றது. 21—2—78 அன்று அனுக்ஞை விக்னேஸ்வர பூஜை முதலியனவும் 22—2—78 அன்று சுந்தரர் பரவைமாளிகைக்கு எழுந்தருளலும், பஞ்சமூர்த்திகள் சந்திரதீர்த்தத்தில் தீர்த்தம்கொடுத்தருளலும், இரவு திருவீதியுலாக் காட்சியும் நடைபெற்றன. 23, 24—2—78 ஆகிய நாட்களில் சுந்தரர் குண்டையூரில் நெல் பெற்ற அற்புத நிகழ்ச்சிகள் பக்த உற்சவமாக நடைபெற்றது. அன்பர்கள் பலர் வழிபட்டுப் பயன் பெற்றனர்.

## சென்னை, தருமபுர ஆதீன சமயப்பிரசார நிலையம்

**நாயன்மார்கள் குருபூஜைகள் :**

சென்னை தருமையாதீன சமயப்பிரசார நிலையத்தில், திருநீலகண்ட நாயனுர், அப்பூதி அடிகள், கலிக்கம்பநாயனுர், எறிபத்த நாயனுர்

ஆகிய சைவசமய நாயன்மார்கள் குருபூஜை விழா முறையே 1—2—78, 9—2—78, 12—2—78, 25—2—78 ஆகிய நாட்களில் நடைபெற்றது. திரு. V. N. ஆறுமுக முதலியார் அவர்கள் பெரிய புராணம் வாசித்து விளக்கம்செய்தார்கள். திருமுறை பயிலும் மாணவ மாணவிகளும் ஸ்ரீ அப்பர் குருகுல மாணவர்களும் நிலைய அன்பர்கள் சிலரும் கேட்டுப் பயனடைந்தனர்.

**கிருத்திகைப் பிரசாதம் வழங்கும் விழா :**

சென்னை தருமையாதீன சமயப்பிரசார நிலையத்தில் கிருத்திகைப் பிரசாதம் வழங்கும் விழா 16—2—78 வியாழக்கிழமை மாலை நடைபெற்றது. விழாவிற்கு சென்னை இந்துசமய அறநிலைய ஆட்சித்துறைத் துணை ஆணையர் திரு. R. அர்ஜுனன் B. A., அவர்கள் தலைமை வகித்தார்கள். ஸ்ரீ செல்வமுத்துக்குமார சுவாமி படத்திற்கு அர்ச்சனை செய்தபிறகு நிலைய ஓதுவார் திரு. S. ஞானப்பிரகாசம் வேளூர்ப் பதிகங்களையும் முருகன் நாமாவளிகளையும் பாடினர்.

தலைவர் தமது தலைமைஉரையில் கூறியதாவது : "அறிவு ஒன்று அறநின்று அறிவார் அறிவில் பிறிவுஒன்று அறநின்றபிரான் அலையோ" என்பது அருணகிரியார் வாக்கு. ஆனாலும் "உள்ளம் உருகில் உடனுவர் அல்லது தெள்ள அறியர் என்று உந்திபற சிற்பரச்செல்வர் என்று உந்திபற என்பது திருவுந்தியாரில் சொல்லப்பெற்றிருந்தாலும், இறைவன் திருமேனி எடுத்ததில் அமைந்துள்ள தத்துவங்களை ஆராய்ந்து அறிவது, சமய நம்பிக்கையை வலுப்படுத்தி பக்தியை வளர்க்க உதவும் என்பதில் ஐயம் இல்லை. இறைவன் தத்துவாதீதன் என்பது உண்மையே.

வைத்தீஸ்வரன்கோயில் கார்த்திகை அபிஷேகப் பிரசாதம் வழங்கும் இந்த நல்ல நேரத்தில் சுப்பிரமணியர் அவதாரம்பற்றி சற்று சிந்திப்போம். நற்குணங்கள் தெய்வ சம்பந்தமுடையவை. துற்குணங்கள் அசுர சம்பந்தமுடையவை. நற்குணங்களாகிய தேவர்களுக்கும், துர்க்குணங்களாகிய அசுரர்களுக்கும் பகைஏற்பட்டு தேவாசுர யுத்தம் மூள நற்குணங்களாகிய தேவர்கள் நிஷ்காம்ய கர்மத்தை ஈஸ்வரார்ப்பணமாகச்செய்ய மலதோஷம்நீங்கி பரிசுத்த மனம் உடையவர்களாய் ஆவரணம் என்னும் மறைப்பு மாத்திரத்தோடு மட்டும்கூடி இருந்தனர். தேவர்களுக்கு உள்ள அஞ்ஞானம் என்னும் மறைப்பை நீக்கி ஆத்மஞானத்தை அருளி, தானே தானாய் விளங்கும் சுதந்தர நிலையை அருளுவதற்காக ஸ்ரீ சுப்பிரமணியர் அவதரித்தார்.

சென்னை H. R. E. டிபார்ட்மெண்டு கமிஷனர் திரு. M. K. பாலசுப்பிரமணியம் I. A. S. அவர்களும் கலந்துகொண்டார்கள். அவர்கள்

ஆற்றிய சிறப்புரையின்போது ஒரு இந்திப் பாடலைக் கூறி விளக்கிப் பேசினார்கள். அதாவது ஒருவன் பாலை மட்டும் சாப்பிட்டுக்கொண்டோ அல்லது கந்த மூலாதிகளைச் சாப்பிட்டுக்கொண்டோ ஆண்டவனை அடைந்துவிடலாம் என்று எண்ணுவது தவறு. உண்மையான பக்தி உள்ளத்தில் ஊறி உறைந்து இருக்கவேண்டும். உள்ளம் உருகும் அளவிற்குப் பக்தி நிறைந்திருக்கவேண்டும். பக்தி ஒன்றினாலேயே பரமனை அடையலாம் என்று கூறி எல்லோரையும் மகிழ்வித்தார்கள்.

**மாதாந்தர சமயப் பிரசார வழிபாடு :**

சென்னை, தருமையாதீன சமயப்பிரசார நிலையத்தின் மாதாந்தர சமயப்பிரசார வழிபாடு 26—2—78 ஞாயிற்றுக்கிழமை மாலை சென்னை நுங்கம்பாக்கத்தைச் சேர்ந்த மகாலிங்கபுரத்தில் உள்ள ஸ்ரீ மகாலிங்க சுவாமி ஆலயத்தில் சிறப்பாக நடைபெற்றது. ஸ்ரீ நவநிதி விநாயகர் சுவாமி அம்பாள் ஆகியமூர்த்திகளுக்கு அபிஷேக ஆராதனைகளும் எல்லா மூர்த்திகளுக்கும் அர்ச்சனையும் செய்யப்பட்டன. வழிபாட்டின் போது திரு. V. இராமமூர்த்தி அய்யர், குமாரி R. கௌரி குழுவினர் திருமுறைப் பாராயணம் செய்தனர்.

வழிபாட்டிற்குப் பின்னர் நிகழ்ந்த சமயப்பிரசாரக் கூட்டத்தில் திரு. R. சிவஞானம் செட்டியார் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார்கள்.

திரு. கருமாரிதாஸர் அவர்கள் 'மாதவழிபாடு உயிர்களுக்கு உணர்ச்சி ஊட்டும் வகையில் சிறப்பாகநடைபெறுகிறது. வழிபாட்டில் கலந்துகொள்ளுகிறவர்கள் உள்ளம் உருகி உன்னத நிலையில் வாழ்வார்கள். அதற்கு அடிப்படையாக மாத வழிபாடு நடைபெறுகிறது. இன்னும் பெருவாரியான மக்கள் கலந்துகொண்டு பயனடைய வேண்டும். திருநீறும், ஐந்தெழுத்தும் ஆண்டவன் அருளைப் பெறுவதற்குச் சாதனம். திருநீறு அணிந்து ஐந்தெழுத்தை முறையாக ஓதி வந்தால் ஆண்டவன் துணையையும் திருவருளையும்பெற்று வையத்தில் வாழ்வாங்கு வாழலாம். அதற்கு சென்னை சமயப்பிரசார நிலைய மாதாந்தர வழிபாடு உறுதுணையாக அமைந்திருக்கிறது' என்று கூறினார்கள். பிரசார நிலையம் வித்துவான். ஸ்ரீமத். மகாலிங்கத்தம்பிரான் சுவாமிகள் எல்லோருக்கும் நன்றி கூறி கூட்டத்தை நிறைவு செய்தார்கள்.

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான
**திருபுவனம் ஸ்ரீ கம்பகரேசுவர சுவாமி தேவஸ்தானத்தில்**

## ஸ்ரீ சரபமூர்த்திக்கு

# அரைக் கோடியர்ச்சனை நிறைவு விழா

**26—3—1978**

திருச்சிற்றம்பலம்

பூவ னூர்ப்புனி தன் திருநாமந்தான்
நாவில் நூறுநூ றாயிரம் நண்ணினர்
பாவ மாயின பாறிப் பறையவே
தேவர் கோவினுஞ் செல்வர்க ளாவரே. —அப்பர்.

திருச்சிற்றம்பலம்

ஆணவத்தால் தானே பரம்பொருள் என்று செருக்குற்ற இரணியனைத் திருமால் - நரசிங்க வடிவங்கொண்டு அழித்து அவனது குருதியைக் குடித்த காரணத்தால் மதங்கொண்டு உலகிற்குத் துன்பம் விளைத்த பொழுது, அந்நரசிங்கத்தை அடக்குவதற்குச் சிவபெருமான் எடுத்தவடிவமே ஸ்ரீ சரபர் திருவுருவம். இவர் திருபுவனம் திருக்கோயிலில் எழுந்தருளி அருள் வழங்குகின்றார். இவரை ஞாயிற்றுக் கிழமையில் வழிபடுவது சிறந்தது. அதிலும் சிறப்பாக அன்று, இராகுகால வேளையில் வழிபட்டு அன்பர்கள் பலர் பயன் பெற்று வருகின்றனர்.

ஸ்ரீ சரபமூர்த்தியை நினைப்பவர்களும் வழிபடுபவர்களும் பகை நீக்கம், பாவக்கழிவு, கள்வர், பகைவர், அரசர்களால் ஏற்படும் துன்பம், அகாலமரணம், வலிப்புநோய், சுரநோய், எதிர்பாராதவிபத்து இவை நீங்கப்பெறுவர். இம்மை மறுமை இன்பங்களையும் வெற்றியையும் எய்தி இன்புறுவர் என்று சரபகல்ப்பம் கூறுகிறது.

"யஸ்ய ஸ்மரண மாத்ரேண வைரிணும் குலநாசனம்
போக மோக்ஷ பலம் சிரேஷ்டம் புக்தி முக்தி பலப்ரதம்
சர்வ பாப ப்ரசமனம் சர்வா பஸ்மார நாசனம்
ராஜ சோராரி மிருத்யூநாம் நாசனம் ஜயவர்த்தனம்
ஜ்வர ரோகக்னம் ஆபத்க்னம்" —சரபகல்ப்பம்.

உலகில் பகையும் பிணியும் நீங்கி வசியும் வளனும் சுரக்கவும் போர்க்குமுறல் அடங்கி அமைதி நிலவவும் இப் பெருமானுக்கு சகஸ்ர நாமார்ச்சனை ரூபமாக 2—9—73ல் லட்சார்ச்சனை தொடங்கப்பெற்றது. அன்பர்களின் ஆர்வத்தாலும் பக்தியாலும் பலரும் பங்குபற்றி வழிபட்டு வருவதாலும் இதைக் கோடியர்ச்சனையாக நிகழ்த்த, ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் திருவுளம் கொண்டுள்ளார்கள் என்பது

அறியத்தக்கது. இக்கோடியர்ச்சனையில் 26-3-78 ஞாயிற்றுக்கிழமை அன்று அரைக் கோடியர்ச்சனை நிறைவு விழாவும் சரப வேள்வியும் நடைபெறும். அன்று காலை லட்சார்ச்சனைதொடங்கி மாலையில் நிறைவு பெறும். அன்று ஸ்ரீ சரபர் உற்சவம் ஆதலால் இரவு வெள்ளியிரதத்தில் ஸ்ரீ சரபர் திருவீதியுலாக் காட்சியும் நடைபெறும். தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் எழுந்தருளி வழிபாடாற்றி அன்பர்கட்கு அருட்பிரசாதம் வழங்கியருள்வார்கள்.

தொடர்ந்து நடைபெறும் லட்சார்ச்சனை, சரப வேள்வி ஜபம் முதலியவற்றில் பங்குகொள்ள விரும்பும் அன்பர்கள் ஒருவார காலத்திற்கு முன்னதாகத் தெரிவித்து கலந்துகொண்டு வழிபட்டு உய்வார்களாக.

| | | | |
|---|---|---|---|
| ஸ்ரீ சரப வேள்வி ஜபம் முதலியவற்றிற்குக் கட்டணம் | | ரூ. | 250—00 |
| ஏகதின லட்சார்ச்சனை 1-க்கு கட்டணம் | ... | ரூ. | 500—00 |
| பஞ்சமுகார்ச்சனை 1-க்கு கட்டணம் | ... | ரூ. | 50—00 |
| சகஸ்ரநாமார்ச்சனை 1-க்கு கட்டணம் | ... | ரூ. | 10—00 |

கட்டணம் அனுப்பவேண்டிய முகவரி:—

பொருளாளர்: ஸ்ரீ கம்பகரேசுவரசுவாமி தேவஸ்தானம்,
திருபுவனம் அஞ்சல், தஞ்சை மாவட்டம்.

---

தருமையாதீனம்

# வேளூர் ஸ்ரீ வைத்தியநாதசுவாமி தேவஸ்தானம்,

வைத்தீசுவரன்கோயில், சீகாழி வட்டம், தஞ்சை மாவட்டம்.

## திருவிளக்கு அறக்கட்டளை நிதி

காணிக்கை செலுத்தியவர்களின் பெயர் விபரமும்
மாயூரம் இந்தியன் வங்கியில் உள்ள முதலீடுகள் விபரமும்.

( மலர் 37, இதழ் 3, பக்கம் 128 இன் தொடர்ச்சி )

| | | | |
|---|---|---|---|
| 164 | திரு. கே. கோபாலன், மல்லேஸ்வரம் பெங்களூர்-55. | ரூ. | 1000 |
| 165 | திரு. சு. குமரப்பன், பலவான்குடி. | | 1000 |
| 166 | உண்டியல் நிதி. | ... | 1000 |
| 167 | ஷை | ... | 1000 |
| 168 | ஷை | ... | 1000 |
| 169 | ஷை | ... | 1000 |
| 170 | திரு. என். கே. இராமன், மல்லேஸ்வரம். | ... | 1000 |
| 171 | திருமதி. கமலா முத்துசாமி, சென்னை - 20. | ... | 1000 |

# எதிர்காலம்

## ஜோதிஷம், திரு. A. இராசமாணிக்கம்

ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நடுநிலைப்பள்ளி, திருப்பனந்தாள்.

( பிங்களஞு பங்குனிமீ 1உ முதல் 31உ முடிய )

( 14—3—1978 முதல் 13—4—1978 முடிய )

பிங்களஞு பங்குனிமீ 1உ மங்களவாரம் கார்த்திகைநக்ஷத்திரம் கௌலவகரணம் கூடிய காலத்தில் சூரிய உதயம் முதல் 21 நாழிகை 6 விநாடிக்கு கடக லக்கினத்தில் லோகரட்சகரான் சூரியபகவான் லோக சுபிட்சார்த்தத்தை முன்னிட்டு கும்ப ராசியிலிருந்து மீன ராசியில் சங்கிரமணமாகப் பங்குனிமாதப் பிரவேசம் செய்கிருர். 26உ சனிவாரம் சாந்திரமான சைத்ர சுத்த பிரதமையாகிறது. அன்று யுகாதிப்பண்டிகை. சாந்திரமானவருஷாரம்பமாகும். சௌரமானவருஷ மாகிய கலியுகாப்தம் 5079. க்ரளயுக்தி வருஷத்துக்கு சனீசுவரன் இராஜாவாகிருர். சங்கிரமணகால கிரகஸ்திதியின் பலனுவது உலக நாடுகளில் எங்கும் தொழில் வளம் பெருகி நவீன உபயோகப்பொருள் கள், யுத்தசாதனக்கருவிகள் ஆகியவற்றின் உற்பத்தி அதிகமாகிவரும். ஆன்ருேர்கள் தேசத்தலைவர்களால் தேசங்களில் எங்கும் தொழில் நிறுவனங்கள் விவசாய நில விஸ்தரிப்புத் திட்டங்கள், பிரஜா நல வேலைவாய்ப்புக்கான முஸ்தீப்புகள் தீவிரமாகிக்கொண்டிருக்கும்.

உலகில் ஏற்பட்டுள்ள திருமடங்கள், ஆசாரியபீடங்களில் உள்ள தவயோக ஞான குருமகான்கள் லோக மக்களுக்கு அறிவுறுத்துகின்ற விவேக ஞான அறிவுரைகள் தெய்வீக ஆசியுரைகளினுல் மக்கள் அனைவரும் விவேக ஞானத்துடன் விளங்குவர். லோகநாடுகளில் மனுநீதியான பரிபாலனங்கள் நடந்துவரும். தேவாலயங்களில் தெய்வ ஆராதனைகள், உற்சவங்கள், விசேஷ தெய்வ பூசைகள் நியமவிதி பிசகாமல் நடந்துவரும். பிரஜாகோடிகள் சீரும் சிறப்பும் உடையவர் களாக இனிது வாழ்வார்கள்.

### சந்திர கிரகணம்

குறிப்பு :— பிங்களஞு பங்குனிமீ 11உ (24—3—1978) சுக்கிரவாரம் பௌர்ணமி. உத்திரம், ஹஸ்தம் நக்ஷத்திரங்களில்

சம்பவிக்கும் இராகு கிரஸ்த கிருஷ்ண தாம்ரவர்ணபூர்ண சோமோ பராக புண்ணியகாலம். இது இந்தியன் ஸ்டாண்டர்டுமணியில்,

| ஸ்பர்சம் | நிமீலனம் | மத்தியம் | உன்மீலனம் | மோக்ஷம் |
| --- | --- | --- | --- | --- |
| 8-5 P. M. | 9-9 P. M. | 9-54 P. M. | 10-39 P. M. | 11-43P.M. |

இக்காலவரையறைகளின்படி ஏற்படும். ஆத்யந்தம் 3 மணி, 38 நிமிஷம். பிரமாணம் 1-46. அன்று பகல் முதல் ஜாமத்திற்குமேல் போஜனம்கூடாது. பூர்ணிமாசிரார்த்தம் மறுநாள் செய்தல்வேண்டும். உத்திரம், ஹஸ்தம், சித்திரை முன் ½, உத்திராடம், திருவோணம், கார்த்திகை, உரோகிணி நக்ஷத்திரங்களில் பிறந்தவர்கள் சாந்தி செய்துகொள்க.

**1. மேஷம் :- அசுவதி - பரணி - கார்த்திகை ¼**

(சு. சே. சோ. லா. - லி. லு. லே. லோ. - அ.)

மேஷராசி 9 பாதங்களும் சுமார் பலனுக நடக்கும். குடும்ப அபிவிருத்தியில் பணவரவுகள் சரளமாக வந்துகொண்டிருக்கும். அவசியமான பிரச்சினைகளுக்கு அவ்வப்போது செலவுகளும்ஏற்பட்டுக் கொண்டிருக்கும். சகோதரருக்கு சுபம் தரும். வித்தியாவியாபாராதி கலைத்துறைகளில் முன் செலவு ஏற்படினும் நற்பலன்கள் ஏற்பட்டுக் கொண்டிருக்கும். புத்திரர் நலம் சாதாரண்மாக இருந்துவரும். மனைவிக்கு நரம்புத்தளர்ச்சியினுல் நலிவு வந்து குணமாகும். செய் தொழிலில் எல்லா அலுவல்களும் திடமாக நடந்துவரும். வெள்ளி சனி சுபமாகும்.

**2. ரிஷபம் :- கார்த்திகை ¾ - உரோகிணி - மிருகசீர்ஷம் ½**

(இ. ஊ. ஏ. - ஒ. வ. வி வூ - வே. வோ.)

ரிஷபராசி 9 பாதங்களும் சுப பலனுக நடக்கும். குடும்பாபி விருத்தியில் வருமானங்கள் போஜன சௌகரியங்கள் திருப்தியாக இருந்துவரும். சகோதரர் ஒற்றுமை ஒத்துழைப்பு பலமாக இருந்து வரும். பூமி இயந்திரங்களில் மனைபிராப்தியில் நன்மைகளை உண்டு பண்ணும். வித்துவத்துவம் கலைத்துறைகள் சிறக்கும். புத்திரர்களுக்கு சௌக்கியபலன் தரும். தாம்பத்தியவாழ்க்கை சுமுகமாக நடந்து வரும். செய்தொழிலில் ஒரு மன எழுச்சி ஏற்படுவதாகி திறம்பட நடந்துவரும். ஞாயிறு திங்கள் சுபமாகும்.

**3. மிதுனம் :- மிருகசீர்ஷம் ½ - திருவாதிரை - புனர்பூசம் ¾**

(கா. கி. - கு. க. ங. ச்சா. - கே. கோ. ஹ.)

மிதுனராசி 9 பாதங்களும் மிச்சிரபலனுக நடக்கும். குடும்ப அபிவிருத்தியில் பண வருவாய்களில் சர்ச்சைகள் வரினும் இலாப

பிராப்தியாக இருந்துவரும். தன்வாக்கு நேர்மையை வற்புறுத்தலில் கண்டிப்பு நிலைமையை உருவாக்கும். சகோதரர் அம்மான்கள் நல மாக இருந்துவருவர். 12உ க்குமேல் பூர்வீக சொத்தில் ஒரு வழக்கு ஏற்படச்செய்யும். தாரபுத்திரர்களின் சௌக்கியம் நன்ருக இருந்து வரும். செய்தொழில்களில் காரியசாதனையையும் மதிப்பையும் உண்டு பண்ணும். செவ்வாய் புதன் சுபமாகும்.

**4. கடகம் :- புனர்பூசம் ¼ – பூசம் – ஆயில்யம்**
(ஹி. ஹு. ஹே. ஹோ. ட. - டி. டு. டே. டோ.)

கடகராசி 9 பாதங்களும் மிச்சிரபலனுக நடந்துவரும். குடும்ப அபிவிருத்தியில் பண வரவுகள் கண்யமாக வந்துகொண்டிருக்கும். அவசியமான சம்பிரதாயச் செலவுகளும் ஏற்பட்டுக்கொண்டிருக்கும். வீடு வாகன சுகசௌகரியங்களில் நல்ல நிலைமையாகவே இருந்து வரும். எல்லாக்காரியங்களும் சுமைபோல்தோன்றினும் இஷ்டதெய்வ கடாக்ஷத்தால் வெற்றிகரமாகச் செயல்பட்டுவரும். தாரபுத்திரர்களின் சௌக்கியம் நன்ருக இருந்துவரும். செய்தொழிலில் அலுவல்கள் திறம்பட நடந்துவரும். ஞாயிறு திங்கள் சுபமாகும்.

**5. சிம்மம் :- மகம் - பூரம் – உத்திரம் ¼**
(ம. மி. மு. மே. - மோ. ட. டி. டு. - டே.)

சிம்மராசி 9 பாதங்களும் சுபபலன்தரும். குடும்பாபிவிருத்தியில் தனுதிசௌகரியங்கள் மேலாக இருந்துகொண்டிருக்கும் சகோதரர்கள் விசுவாசத்துடனும் அனுசரணையாகவும் இருந்துவருவர். வித்தியா வியாபாராதி கலைத்துறைகளில் நற்பலன்கள் வந்துகொண்டிருக்கும். பூமி இயந்திர வகையில் ஒரு உபயோகமான செலவை ஏற்படுத்தும். புத்திரர் பௌத்திரர்களின் சௌக்கியம் நன்ருக இருந்துவரும் தாம் பத்திய வாழ்வில் சுமுகம் நிலவும். செய்தொழிலில் நல்ல செல்வாக் கும் போற்றுதலும் ஏற்படும். செவ்வாய் புதன் சுபமாகும்.

**6. கன்னி :- உத்திரம் ¾ - ஹஸ்தம் - சித்திரை ½**
(டோ. பா. பி. - பு. ஷ. ண. ட. - பே. போ.)

கன்னியாராசி 9 பாதங்களும் மிச்சிரபலனுகநடக்கும். குடும்பாபி விருத்தியில் பணம் வரவும் செலவும் சரிசமனுக இருந்துகொண்டிருக் கும், சகோதரிவழியில் ஒரு செலவு ஏற்படும். வித்துவத்துவம் கலைத் துறையில் ஒரு அளவு நற்பலன் வந்துசேரும். புத்திரருக்கு ஒரு விபத்து வந்து தப்பும். தன்ஸ்திரீக்கு சிரோபாதை போன்ற நலிவு வந்து குணமாகும். ஞாயிற்றுக்கிழமை சூரியார்ச்சனை செய்ய நலம் தரும். செய்தொழிலில் நன்மையை ஏற்படுத்திவரும். வெள்ளி சனி சுபமாகும்.

**7. துலாம் :— சித்திரை $\frac{1}{2}$ – சுவாதி – விசாகம் $\frac{3}{4}$**
(ர. ரி. - ரு. ரே. ரோ. தா. - தி. து. தே.)

துலாராசி 9 பாதங்களும் சுபபலன் தரும். குடும்பாபிவிருத்தியில் தனவரவுகள் மதிப்பாக வந்துகொண்டிருக்கும். சகோதரருக்கு இராசாங்கவனுகூலாதிகளை ஏற்படுத்தும். வித்தியாவியாபாராதி கலைத் துறையில் எதிர்பாராத ஒரு நற்பலனைக்கொடுக்கும். புத்திரர் பௌத்திரர்களின் சௌக்கியம் நன்றாக இருந்துவரும். வழக்கு விவகாரங்களில் ஜெயம் ஏற்படும். தன்ஸ்திரீக்கு மயக்க நலிவுவரினும் உடன் குணமாகும். செய்தொழிலில் அலுவல்கள் திறம்பட நடந்துவரும். ஞாயிறு திங்கள் சுபமாகும்.

**8. விருச்சிகம் :— விசாகம் $\frac{1}{4}$ அனுஷம் – கேட்டை.**
(தோ. - ந. நி. நு. நே. - நோ. ய. யி. யு.)

விருச்சிகராசி 9 பாதங்களும் மிச்சிரபலனாக நடக்கும். குடும்பாவிருத்தியில் பண வரவுகள் திருப்தியாக வந்துகொண்டிருக்கும். சகோதரருக்கு சௌக்கிய பலன் தரும். பூமி இயந்திரங்களில் நல்ல பலன் வந்துசேரும். புத்திரனுக்கு உஷ்ண நலிவு, காது நரம்புகளில் கோளாறுகள் ஏற்பட்டுக் குணமாகும். ஞாயிற்றுக்கிழமையில் சூரிய அருச்சனைசெய்ய நலம்தரும். தாம்பத்தியவாழ்க்கை சுமுகமாக நடந்துவரும். செய்தொழிலில் அரசாங்க நிர்பந்தம் ஏற்படும். ஏற்படினும், சமாளித்தல் ஆகும். செவ்வாய் புதன் சுபமாகும்.

**9. தனுசு :— மூலம் – பூராடம் – உத்திராடம் $\frac{1}{4}$**
(யே. யோ. பா. பி. பு. த. ப. ட. - பே.)

தனுர்ராசி 9 பாதங்களும் சுமார் பலனாக நடக்கும். குடும்பாவிருத்தியில் அல்லல்களுக்கிடையே நன்மைகளும் ஏற்பட்டுக்கொண்டிருக்கும். சகோதரருக்கு மாதப் பிற்பகுதியில் ஒரு நற்பலன் ஏற்படும் வித்துவத்துவம் கலைத்துறையில் பிரசித்தம் ஏற்படும். மேலோர் பெரியோர்களினால் நன்மைகள் ஏற்பட்டுக்கொண்டிருக்கும். புத்திரர் சௌக்கியம் தாரசௌக்கியம் திருப்திகரமாக இருந்துகொண்டிருக்கும். செய்தொழில் அல்லது உத்தியோகத்தில் நன்மதிப்புத்தரும். வியாழன் வெள்ளி சுபமாகும்.

**10. மகரம் :— உத்திராடம் $\frac{3}{4}$ – திருவோணம் – அவிட்டம் $\frac{1}{2}$**
(போ. ஜ. ஜி. - ஜு. ஜே. ஜோ. - கா. கி.)

மகரராசி 9 பாதங்களும் சுபபலன் தரும். குடும்பாபிவிருத்தியில் நல்ல தனச் செலாவணியை ஏற்படுத்திக்கொண்டிருக்கும். சகோதரருக்கு நற்காரியங்களைச் செய்விக்கும். வித்தியாவியாபாராதிகளில்

அரசாங்க அனுகூலம் ஏற்படும். வெள்ளை சிவப்புக்கல் பதித்த ஆபரணச் சேர்க்கையைத்தரும். இம்மாதம் ஒரு பெண் மகவு உண்டாகும். தாம்பத்தியவாழ்வில் சுமுகம் நிலவும். பின்பகுதியில் ஒரு பிணக்குவந்து சரிபடும். செய்தொழிலில் அலுவல்கள் நிரம்பட நடந்துவரும். ஞாயிறு திங்கள் சுபமாகும்.

**11. கும்பம் :– அவிட்டம் ½ – சதயம் பூரட்டாதி ¾**

( கு, கே. - கோ. ஸ. ஸி. ஸு. - ஸே. ஸோ. தா. )

கும்பராசி 9 பாதங்களும் சுபபலன்தரும். குடும்பாபிவிருத்தியில் பணச்செலாவணி சரளமாக இருந்துவரும். குடும்பத்தில் நற்காரியங்கள் நடக்கும் சகோதரருக்கு இம்மாதப் பிற்பகுதியில் ஒரு நன்மை ஏற்படும். எல்லா விஷயங்களிலும் ஜெயபிராப்தியாக இருந்துவரும். வித்தியா வியாபாராதி கலைத்துறைகளில் கௌரவம்தரும். புத்திரர் புத்திரிகளின் நலன் திருப்தியளிக்கும். தாம்பத்தியவாழ்வில் சுமுகம் நிலவும். செய்தொழிலில் காரியங்கள் நன்முறையில் செயல்பட்டு வரும். செவ்வாய் புதன் சுபமாகும்.

**12. மீனம் :– பூரட்டாதி ¼ – உத்திரட்டாதி – ரேவதி.**

( தி. து. ஸ. ச. த. - தே. தோ. ச. சி. )

மீனராசி 9 பாதங்களும் மிச்சிரபலனாகநடக்கும். குடும்பாபிவிருத்தியில் தனவரவுகள் சீராக இருந்துவரும். இருப்பினும், குடும்பநலன் அந்தஸ்துகளில் க்ஷீணம் ஏற்படாது. சகோதரர்களின் நலன் நன்றாக இருந்துவரும். வித்துவத்துவம் கலைத்துறையில் நற்பெயர் உண்டாகும், கால்நடைவாகன பிராப்தியில் சாதாரணபலனாக இருந்துவரும். புத்திரனுக்கு இரத்தபித்தநலிவும், தன்ஸ்திரீக்கு கெற்பத்தில் நலிவும் வந்து குணமாகும். ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமிக்கு அருச்சனைசெய்ய நலம்தரும். செய்தொழில் பிரசித்தமாக நடந்துவரும். புதன் வியாழன் சுபமாகும்.

# பங்குனிமாதச் சிறப்பு நாட்கள்

| | |
|---|---|
| 11—3—78 | செவ்வாய், மீன்ரவி 21-6 ஷடசீதி, காரடையான் நோன்பு. திருவையாற்றில் மாதப்பிறப்பு தீர்த்தம் கிருத்திகை விரதம். வேளூர்க்கிருத்திகை. |
| 15—3—78 | புதன், வேளூரில் சந்திரசேகர உத்சவமூர்த்தி. திருபுவனம் பேரளம் உய்யக்கொண்டான் திருமலை முதலிய இடங்களில் பங்குனி உத்திர உத்சவஆரம்பம். |
| 17—3—78 | வெள்ளி, ஸ்ரீ கணம்புல்ல நாயனர் குருபூஜை. |
| 18—3—78 | சனி, திருவையாறு அந்தணபுரத்தில் ஸ்ரீ திருநந்திதேவர் ஜனனம். இரவு பட்டாபிஷேகம். |
| 19—3—78 | ஞாயிறு, திருவையாறு திருமழபாடியில் ஸ்ரீ திருநந்தி தேவர் திருக்கல்யாணம். |
| 20—3—78 | திங்கள், ஸ்ரீ முனையடுவார் நாயனர் குருபூஜை. |
| 22—3—78 | புதன், பிரதோஷம். |
| 24—3—78 | வெள்ளி, பௌர்ணமி விரதம். மாத பூஜையில் தயிர் அபிஷேகம். திருபுவனம், திருவாரூர், வேளூர், பேரளம், உய்யக்கொண்டான்மலை முதலிய இடங்களில் பங்குனி உத்திர தீர்த்தம், தருமையாதீனம் இருபத்தாருவது ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் காளயுக்தி வருஷத்திய குருபூஜை விழாவின் திருமுகம் ஒப்பமிட்டு பூஜையில் வைத்தருளல். சந்திரகிரகணம் இரவு மணி 8—5 to 11—43. |
| 29—3—78 | புதன், தருமையாதீனம் 21 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சச்சிதானந்த தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் குருபூஜை. |
| 31—3—78 | வெள்ளி காளாஷ்டமி. |
| 4—4—78 | செவ்வாய், ஸ்ரீ தண்டியடிகள் நாயனர் குருபூஜை. |
| 5—4—78 | புதன், பிரதோஷம். |
| 7—4—78 | வெள்ளி, சர்வ அமாவாசை. |
| 8—4—78 | சனி, யுகாதி பண்டிகை. தெலுங்கு வருஷப் பிறப்பு. வசந்த நவராத்திரி ஆரம்பம். |
| 10—4—78 | திங்கள், கிருத்திகை விரதம். |
| 11—4—78 | செவ்வாய், ஸ்ரீ நேசநாயனர் குருபூஜை. வேளூர்க் கிருத்திகை. திருக்கடவூர் முனீஸ்வரபூஜை. |
| 12—4—78 | புதன், ஸ்ரீ தொகையடியார் குருபூஜை. |
| 13—4—78 | வியாழன், மேஷரவி 41-28 விஷு புண்ணியகாலம். திருவையாறு வருஷப்பிறப்பு தீர்த்தம். |